# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 15 செவ்வாய்க்கிழமை (29-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:217


29 JUN 2004

# காணாமற் போனோர் குறித்துப் பதில்தர இராணுவத்துக்கு இறுதிக் காலக்கெடு!

## ஆள்கொணர்வு மனு வழக்கில் யாழ்.மேல் நீதிமன்று விதித்தது

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.குடாநாட்டில் 1995-96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற் போனோர் என்று கூறப்படுபவர்கள தொடர்பான ஆள்கொணர்வு மனு வழக்குகளில் பதில் மனுத் தாக்கல் செய்வதற்கு இராணுவத் தரப்புக்கு இறுதிக் காலக்கெடுவை வழங்கியிருக்கின்றது யாழ்.மேல்நீதிமன்றம்.

ஏழு ஆள்கொணர்வு மனுக்கள் தொடர்பாக இந்த இறுதிக் கால அவகாசத்தை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா நேற்று வழங்கினார்.

1995-96 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்.குடாநாட்டில் இலங்கைப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்போது பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் காணாமற்போயினர் என்பது தெரிந்ததே.

அவர்களில் 48பேர் தொடர்பில் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஆள் கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் ஆறு மனுக்கள் நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த வழக்குகளில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் சார்பில் இன்னமும் பதில் மனு அணைக்கப்படவில்லை என்று நீதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவை ராணுவம் பாதுகாப்பதால் சமாதான நடவடிக்கையில் நெருக்கடி

## கண்காணிப்புக் குழுவினர் ஊடாக அரசுக்குப் புலிகள் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்29

"கருணாவை இராணுவம் பாதுகாத்துக்கொண்டிருக்கிறது. அரசு அவரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது. அந்த நிலை நீடிக்கும் வரை அரசுத் தரப்பு சமாதான முன்னெடுப்புகளில் நம்பகத்தன்மையோடு நடப்பது மாதிரி இல்லை. இதனைக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஊடாக அரசுக்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். இதனைப் பெரியதொரு நெருக்கடி நிலையாகத்தான் நாங்கள் கருதுகிறோம்"

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் செய்தியாளருக்குத் தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரொன்ட் புறுக் ஹொவ்டே தலைமையில் கண்காணிப்புக் குழுவின் நான்கு உறுப்பினர்கள் நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோரடங்கிய குழுவே

(16ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது....

படங்கள்: வசந்தன

## படையினர்-புலிகள் சந்திப்புகள் இடைநிறுத்தப்பட்டதால் சிக்கல்

### கண்காணிப்புக்குழுப் பிரதித் தலைவர் தெரிவிப்பு

படையினருடனான மாதாந்த் சந்திப்பை இடைநிறுத்தி வைக்கும் விடுதலைப் புலிகளின் முடிவானது, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மாத்திரமல்லாது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரண்டு தரப்புக்களுக்குமே நிலைமையைச் சிக்கலாக்கி உள்ளது.

இப்படித் தெரிவித்தார் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹெக்ரப் ஹொக்லண்ட்.

நேற்றிரவு பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

நேற்றுக் கிளிநொச்சியில் விடுத

(16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை ஊழியர் போராட்டம் நேற்றுமுதல் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.

தமது கோரிக்கைகள் தொடர்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் செயற்படுத்த கால அவகாசம் வழங்குவதற்காகப் போராட்டத்தை இடைநிறுத்துவதாக ஊழியர் சங்கம் தெரிவித்தது.

நேற்று முற்பகல் 9 மணியளவில் ஊழியர் சங்கப் பொதுச் சபை கூடி வேலைநிறுத்தம் தொடர்பாக ஆராய்ந்தது. அதில் போராட்டத்தை இடைநிறுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதேசமயம், தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்குச் சுமுகமான தீர்வினைப் பெற்றுத்தர உழைத்த அனைவருக்கும் ஊழியர் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. (ஒ-6)

## வவுனியாவில் ஞாயிறு இரவு ஒருவர் சுட்டுக் கொலை!

வவுனியா,ஜூன்29

வவுனியா - பட்டக்காடு வீதி, கணேசபுரம் பகுதியில் நடுத்தர வயதுடைய ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

வவுனியா - புதிய மணிப்புரம் எனும் இடத்தைச் சேர்ந்த கே. தேவராஜ் (வயது 50) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவராவார். இவர் புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இவர் புளொட் அமைப்பிலிருந்து விலகினார் எனவும் கூறப்படுகிறது.

சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கையிலேயே இவர் சுடப்பட்டிருக்கிறார்.

இக்கொலை தொடர்பாகப் பொலஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என வவுனி

(16ஆம் பக்கம் பார்க்க)

### கிருசாந்தி வழக்குக் குற்றவாளியான

# இராணுவக் கோப்ரல் ராஜபக்ஷ நேற்று யாழ். மன்றில் ஆஜர்!

### ஆள்கொணர்வு மனுக்கள் தொடர்பாக

யாழ்ப்பாணம்,ஜூன்29

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசாமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் அவரையும் மற்றும் மூவரையும் படுகொலை செய்ததாகக் கூறப்படும் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தின் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று யாழ்மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரது வாக்குமூலம் நேற்றுப் பதிவுசெய்யப்படும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது நேற்று இடம்பெறவில்லை.

அரியாலைப் படைமுகாம் ஒன்றில சோமரத்ன ராஜபக்ஷ பணியாற்றிய சமயம்; அப்பகுதியில் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனவர்கள் என்று கூறப்படும் சிலர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் ஆறு பேர் தாக்கல் செய்த ஆள்கொணர்வு மனுக்கள் நேற்று யாழ்.மேல்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அந்த வழக்குகளில் முதலாவது எதிர் மனுதாரராக ராஜபக்ஷவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் தொடர்பாக சில விடயங்களைத் தெரிவிக்கத் தமக்குச சந்தர்ப்பம் தருமாறு ராஜபக்ஷ கடிதம் மூலம் மேல் நீதிமன்றத்தைக் கோரியிருந்தார்.

இந்த விண்ணப்பத்தை ஏற்று ராஜபக்ஷ நீதிமன்றத்தில் தோன்றி வாக்குமூலம் அளிக்க மேல்நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இதன்படி, வெலிக்கடைச் சிறை

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுண்டல் வியாபாரிக்கு நகரில் கத்திக்குத்து!

யாழ்ப்பாணம்,ஜூன்29

சுண்டல் வியாபாரி ஒருவர், யாழ். நகரப் பகுதியில் வைத்து நேற்றிரவு 7 மணியளவில் நபரின் கத்திக் குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

யாழ்.மானிப்பாய் வீதியைச் சேர்ந்த எஸ்.பாலசுப்பிரமணியம் (வயது53)

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக்கோரும் மனு:

## பிரதிவாதிகளை மாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்று அனுமதி

கொழும்பு,ஜூன்29

புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகளை மாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி அளித்திருக்கிறது.

ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த மனுவில் கடந்த அரசின் பிரதமரும், அமைச்சர்களும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

தற்போது ஆட்சி மாறியிருப்பதனால் பதவியிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சரவை உறுப்பினர்களைப் பிரதிவாதிகளாக மாற்றுவதற்குக் கோரும் மனுவொன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் புதிதாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சமூகத்தைச் சீரழிக்கும் தீயசக்திகள் குறித்து நாம் அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டும்

## தமிழ் எம்.பிக்களுக்கு இதில் அதிக அக்கறை தேவை என்கிறார் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.குடாநாட்டுச் சமுதாயத்தைச் சீரழித்து நாற்றமுறச் செய்வதற்கு சில தீய சக்திகள் தீவிரமாக முயற்சி செய்கின்றன.

இந்த விடயத்தில் எமது மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமாகும்.

இந்த விடயத்தில் தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிக அக்கறை எடுத்துச் செயற்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

தமிழ்க்கூட்டமைப்பின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசியல்துறையினருக்கும் இடையிலான மாதாந்தச் சந்திப்பு பொற்பதி வீதியில் உள்ள யாழ்.மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அந்தச் சந்திப்பில் எம்.பிக்கள் மத்தியில் உரையாற்றியபோதே இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செ. கஜேந்திரன், கஜேந்திரகுமார், திருமதி பத்மினி சிதம்பரநாதன், கி.சிவனேசன், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள், மாணவர்களின் கல்விநிலை, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன குறித் ஆராயப்பட்டன.



இந்தச்சந்திப்பில் இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது:-

எமது சமூகத்தை நாற்றமுறச் செய்யும் நடவடிக்கைகளில் சில தீய சக்திகள் திட்டமிட்டமுறையில் செயற்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமாகும். இதுகுறித்து மக்கள் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தி, அவர்களைப் பாதுகாப்பதில் எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுச் செயற்படவேண்டும்.

குடாநாட்டின் கல்விநிலை இன்று மிகவும் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. உயர்தரப் பரீட்சையில் எமது மாவட்டம் 14 ஆவது இடத்துக்குப் பின் சென்றிருப்பதாகக் கணிப்பிடப்பட்டிருக்கின்றது. இது மிகவும் கவலைதருகின்ற விடயமாகும்.

மாணவர்களின் கல்விக்கு வலுவான அடித்தளம் இடப்படுவது மிகவும் அவசியம். முன்பள்ளியில் மாணவர்கள் பெற்றுக்கொள்கின்ற வலுவான அடித்தளமே அவர்களின் எதிர்கால வாழ்க்கையினைத் தீர்மானிக்கின்றது.

எனவே, முன்பள்ளிகளை வளப்படுத்தி, அவற்றின் செயற்பாடுகளைச் சிறப்பாக வளர்த்தெடுத்து எமது மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை உயர்த்துவது தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்ட சம்பந்தப்பட்ட அனைவரதும் கடமையாகும்.

சரியான முன்பள்ளிக் கொள்கைகள் வகுக்கப்பட்டு முன்பள்ளிகளின் சிறப்பான செயற்பாடு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

பின்தங்கிய பகுதிகளின் தேவைகளை இனங்கண்டு இயன்றவரை அவற்றை நிறைவுசெய்வதுடன், அப்பகுதிகளின் கல்வித் தரத்தையும் உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அனைவினதும் கடமையாகும் - என்று தெரிவித்தார். (-4)

# ஓமந்தைச் சாவடி ஊடாக யாழ்.வரும் லொறிகளின் எண்ணிக்கை குறைவு

## தீவிர சோதனை காரணமாம்

வவுனியா ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாகப் பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டுவருகின்ற வாகனங்கள் தீவிரமாகச் சோதனையிடப்படுகின்றன. இதனால் ஒரு நாளில் குறைந்த எண்ணிக்கையான வாகனங்களே யாழ்ப்பாணம் வருவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் ஓமந்தைச் சோதனைச் சாவடியில், யாழ்.வரும் வாகனங்கள் கடுமையாகச் சோதனை செய்யப்படுவதில்லை என்றும் -

முகமாலைச் சோதனைச் சாவடியில் அந்த வாகனங்கள் பொருள்கள் அனைத்தும் இறக்கப்பட்டுத் தீவிரமாகச் சோதனையிடப்பட்டன என்றும் - கூறப்படுகின்றது.

கடந்த வாரம் ஓமந்தைச் சோதனைச் சாவடிக்குப் புதிய படை அதிகாரி நியமிக்கப்பட்டார். அதனை அடுத்து அங்கும் வாகனங்களில் கொண்டு வரப்படும் பொருள்கள் முழுமையாக இறக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில், பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள் பலர் பணிக்கு வருவதைப் பகிஷ்கரித்து வருவதாகவும் - இதனால் ஒரு நாளில் வழக்கத்தைவிடக் குறைந்த எண்ணிக்கையான வாகனங்களே யாழ்ப்பாணம் வந்து சேர்வதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தைக்கு 60 இற்கு மேற்பட்ட லொறிகள் வந்தபோதிலும் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாகத் தினமும் ஐந்து லொறிகளே சோதனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# நயினை ஆலய தேர்த்திருவிழாவுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்னதாக தம்பபூசை, வசந்த மண்டப பூசை என்பன நடைபெற்று அம்பாள் உள் வீதியுலா வருவார். தொடர்ந்து அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.

தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யபட்டுள்ளதுடன் தனியார் பஸ்சேவையும் இடம்பெறும். அத்துடன், குறிகாட்டுவானில் இருந்தும், ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்கு துறையில் இருந்தும் விசேட படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யபட்டுள்ளன. வலி.மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த அடியார்கள் காரைநகா ஊடாக ஊர்காவற்றுறையை அடைந்து அங்கிருந்து கண்ணகை அம்மன் இறங்குதுறை ஊடாக நயினாதீவுக்குச் செல்லமுடியும்.

குறிகாட்டுவானிலும், கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையிலும் அடியார்களின் நலன்கருதி தாகசாந்தி வசதிகள் மற்றும் மலசலகூட வசதிகள் என்பன செய்யப்பட்டுள்ளன.

வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபை மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை பிரதேச சபை ஆகியன படகுச் சேவைப் பயணிகளுக்கான அத்தியாவசிய சேவை என்பனவற்றை ஏற்பாடு செய்துள்ளன.

அதேபோன்று, ஆலயச் சுற்றாடலிலும் அடியார்களின் வசதிகருதி தாகசாந்தி வசதிகள், முதலுதவி வசதிகள் என்பன செய்யப்பட்டுள்ளன. அன்னதான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

நாளை புதன்கிழமை பகல் கைலைக்காட்சியும் இரவு சப்பரத் திருவிழாவும் நடைபெறும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இரவு திருவூஞ்சலும் மறுநாள் சனிக்கிழமை இரவு தெப்பத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.(எ-10)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை,ஜூன்29

கடந்த கால யுத்த நடவடிக்கைகளில் பலியானோர் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான விவரங்களை சேகரிக்குமுகமாக யாழ் பிரதேசப் பிரிவுக்கான கலந்துரையாடலும் படிவங்களை கையளிக்கும் நிகழ்வும இன்று மாலை 3 மணிக்கு யாழ்.பலநோ.கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

இக்கலந்துரையாடலில் யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட கிராம அலுவலர்கள், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர்கள், உப செயலாளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர். (ஒ-30)

## சிறுமியை காணவில்லையென முறைப்பாடு

பாடசாலைக்குச் சென்ற சிறுமி வீடு திரும்பவில்லை என யாழ். பொலீஸ் நிலைய சிறு குற்றப் பிரிவில் சிறுமியின் பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்த உதயகுமார் சுபாங்கி (வயது 16) என்ற சிறுமியையே கடந்த சனிக்கிழமைமுதல் காணவில்லை என பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறைப் பகுதிப் பாடசாலையில் கல்வி கற்றுவரும் இவர் அன்றைய தினம் விசேட வகுப்பெனக் கூறிப் பாடசாலை சென்றார் என்றும்-

அவர் நேற்றுவரை வீடு திரும்பவில்லை என்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

# கிளிநொச்சியில் விவசாய பீடம் மீள நிறுவ ரூபா 20 கோடி நிதி

## 'நிகொட்' நிறுவனம் வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தைக் கிளிநொச்சியில் மீள நிறுவுவதற்கு முதற்கட்டமாக 20 கோடி ரூபாவை வழங்க நிகொட் நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்தகவலை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.செயலக நிகொட் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம வழங்குவதாக நிகொட் திட்டப் பணிப்பாளர் எஸ்.லங்காநேசன் தெரிவித்தார் என்று துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், பதில் விவசாய பீடாதிபதி எஸ்.உதயதாஸ் மற்றும் நிதியாளர் எஸ்.கனகரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் கிளிநொச்சியிலுள்ள முறிகண்டிப் பகுதியில் இயங்கிவந்தது. நாட்டில் இடம்பெற்ற யுத்த நெருக்கடிகளால் அப்பீடம் அங்கிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு இடம்மாற்றம செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

அந்தப் பீடத்தை மீளவும் கிளிநொச்சியில் அமைப்பதற்கே இந்த நிதி முதல் கட்டமாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

# வவுனியா வளாக ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் குதிப்பு!

வவுனியா,ஜூன்29

யாழ்.பல்கலைக்கழகத்தின வவுனியா வளாகக் கல்விசாரா உத்தியோகத்தர்களும், அதிகாரிகளும் நேற்று வேலைப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பூங்கா வீதியில் நிர்வாகப்பிரிவுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் மாணவர்களின் பாவனைக்காக வழங்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே அவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இக்கட்டடத்தை மாணவர்கள் பயன்படுத்தினால் நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்படும் என்று தெரிவித்த அதிகாரிகள், தம்முடன் ஆலோசிக்காது, கட்டடத்தை மாணவருக்கு வழங்கும் முடிவைத் துணைவேந்தர் தன்னிச்சையாகவே எடுத்தார் எனக் குற்றஞ்சாட்டினர்.

நிர்வாகத்தினருக்குச் சொந்தமான கட்டடத்தை மாணவர்களிடம் இருந்து மீளப்பெற்றுத் தம்மிடம் கையளிக்கும் வரை வேலைப்பகிஷ்கரிப்புத் தொடரும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (க)

# வேலைநிறுத்தம் நடத்தும் முடிவை சுகாதார ஊழியாகள் கைவிட்டனர்

சுகாதாரத் தொழிற்சங்க முன்னணி, இன்றும் நாளை புதன்கிழமையும் நாடெங்கிலும் மேற்கொள்ளவிருந்த வேலைநிறுத்தத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவுடன் தொழிற்சங்க முன்னணியினர் நேற்று நடத்திய சந்திப்பின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக முன்னணியின் இணைப்பு ஏற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய கூறினார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் திறைசேரி அதிகாரிகளும் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பின் போது பதில் மற்றும் சமயாசமய அடிப்படையில் பணியாற்றுபவர்களுககுக் கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி இடப்பட்ட சுற்றறிக்கையின்படி அதி உச்ச சம்பளத்தை வழங்குவது என்று இணக்கம் காணப்பட்டது.

வடக்கு-கிழக்கு, வடமேல், சப்பிரகமுவா மாகாணங்களிலுள்ள சுகாதார ஊழியர்களுக்கு அதிகரித்த சம்பளத்தை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச பதிவுசெய்யப்பட்ட உதவி மருத்துவ உத்தியோகத்தர்களின் சம்பளப்பிரச்சினை திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழு மூலம் தீர்த்து வைக்கப்பட இருக்கிறது.

இணைப்பு ஏற்பாட்டாளர் ரவி குமுது, முன்னணியைச் சேர்ந்த சகல ஊழியர்களையும் வழமைபோல் வேலைக்குச் செல்லுமாறு கேட்டுள்ளார். (ஒ-9-4)

# அரச அச்சகத் தீ: சதியா? விசாரணை சி.ஐ.டியினரிடம்!

கொழும்பு,ஜூன்29

அரச அச்சகத்தில் இடம்பெற்ற திடீர் தீவிபத்துக் குறித்து விசாரணை மேற்கொள்ளும் பொறுப்பை விசேட பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் ஏற்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை 6.15 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்துக்காரணமாக சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு அதிகமான பொருள்கள் எரிந்து சாம்பராகியுள்ளன.

இந்தத் தீவிபத்து மின்சாரக் கோளாறு காரணமாக ஏற்பட்டிருக்க முடியாது என பிரதான அச்சகர் நெவில நாணயக்கார சந்தேகம் தெரிவித்துள்ளார்.

கொள்கலன்களில் அடைக்கப்பட்டிருந்த - அச்சுக்குப் பயன்படுத்தப்படும் - பெருந்தொகையான - வர்ணமைகளில் தீபற்றிக் கொண்டதால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இது தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்து அல்ல என்ற சந்தேகம் வலுத்துள்ளதால் விசேட பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் அரச அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் பலரைத் துருவித் துருவி விசாரணைசெய்து வருகின்றனர்.

நேற்றுவரை விசாரணைகளில் எவ்விதத் திருப்பமும் ஏற்படவில்லை என பொலீஸ் புலனாய்வுப் பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (க)

## பயிர்களை அழித்த பன்றி ஒழிப்பு

சாவகச்சேரி,ஜூன்29

மட்டுவில் தெற்குப் பகுதியில் விவசாயிகளின் தோட்டப் பயிர்களை நாசம் செய்துவந்த காட்டுப்பன்றி ஒன்று அப்பகுதி இளைஞர்கள் மற்றும் விவசாயிகளால் மடக்கி தடம் இட்டு அடித்துக் கொல்லப்பட்டது. (எ-31)

# மருத்துவபீட மாணவி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி ஒருவர் மருத்துவபீடமும் பல்கலைக்கழக நிர்வாகமும் தனக்கு அநீதி இழைத்துவிட்டன என்று கூறி இன்று செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதாக அறிவித்திருக்கிறார்.

கிருஷ்ணன் புஸ்பமாலா என்ற மாணவியே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு மருத்துவக் கற்கை நெறியிலிருந்து விலக்கப்பட்ட இந்த மாணவி அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு இணங்க அந்த மாணவி மீண்டும் மருத்துவ பீடத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

எனினும், இப்போதும் தனக்கு மருத்துவ பீடத்தில் அநீதி இழைக்கப்பட்டுவருவதாகவும் -

எனவே, தான் வேறு பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வியைத் தொடர்வதற்குத் துணைவேந்தர் சிபார்சு செய்ய வேண்டும் என்றும் - கோரியே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# திஸ்ஸ தேவேந்திர நிர்ணயக் குழுவின் அறிக்கை கிடைத்த பின் சம்பள உயர்வு

திஸ்ஸ தேவேந்திர சம்பள நிர்ணயக் குழுவின் சிபார்சு அறிக்கை கிடைத்தவுடன் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்திருக்கிறார்.

அரச ஊழியர்களின் சம்பள முரணபாட்டை நிவர்த்தி செய்வது குறித்து ஆராய திஸ்ஸ தேவேந்திர தலைமையிலான விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது என்றும் -

பத்துப்பேர் கொண்ட இந்தக் குழுவின் சிபார்சு அறிக்கை அடுத்த மூன்று மாத காலத்தில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் - அமைச்சர் மேலும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளா மாநாட்டிலேயே அமைச்சர் இவற்றைத் தெரிவித்தார்.

சம்பள நிர்ணயக் குழுவின் சிபாரசுக்குப் புறம்பாக சுகாதாரச் சேவைத் துறையின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையினால் சம்பள முரண்பாடு மேலும விரிவடைந்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார். இதன் காரணமாக சம்பள முரண்பாடு சமநிலை அடையும் வகையிலான யோசனைகளை முன்வைக்கும் பொறுப்பு திஸ்ஸ தேவேந்திர குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ஒ-9-4)

யாழ்ப்பாணம்



# உதயன்

## புலிகளிடமிருந்து வரும் முன்னெச்சரிக்கை

மானிப்பாயில் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் நடத்திய சங்கமம் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன ஆற்றிய உரை இன்றைய நிலையில் முக்கியத்துவம் கொடுத்து அவதானிக்கப்பட வேண்டியதொன்று. அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அடுத்த நிலையில் இருக்கும் ஒரு மூத்த பிரமுகர் என்பதால் மட்டுமல்லாமல், மிக முக்கியமான கருத்துக்களை அவர் முன்வைத்திருப்பதாலும் அது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகின்றது.

"ஒருபுறம் தமிழ்க் தேசியத்தைப் பலவீனப்படுத்திக் கொண்டு, மறுபுறம் சர்வதேசத்திடம் உதவிகளைப் பெற்று, தன்னைப் பலப்படுத்திக்கொண்டு, மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அரசு தயாராகி வருகின்றது. போர் வரட்டும். எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம்" - இப்படி அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சூளுரைத்திருக்கின்றார்.

தமிழர்களின் ஒற்றுமையைச் சிதைத்து - பிரிவினை, பிளவுகளை ஏற்படுத்தி - தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்தி - தமிழ்த் தேசியப் போராட்டத்தை நசுக்கும் திட்டங்களில் சிங்களப் பேரினவாத அரசுகள் ஈடுபட்டு வந்துள்ளமை இன்று அம்பலமாகியுள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இந்த விடயம் இதே பத்தியில் நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டிய அம்சம்தான். ஆனால், தங்கனின் உரையில் அதற்கு அப்பாலும் கவனிக்கத்தக்க ஒருவிடயம் தொனிப்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் புரிந்துகொள்ள - உணர்ந்துகொள்ள - வேண்டும்.

"சர்வதேசத்திடம் உதவிகளைப் பெற்று தன்னைப் பலப்படுத்தி, மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடுக்க அரசு தயாராகி வருகின்றது. கடற்கலங்கள் கொள்வனவு, வெளிநாடுகளில் படைப்பயிற்சிகள் என்பன இதையே தெளிவுபடுத்துகின்றன" - இவ்வாறு அவர் மேலும் கூறியிருக்கின்றார்.

"போர் வரட்டும், எத்தகைய சூழ் நிலையையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்" - என்றும் அவர் அடித்துக் கூறியிருக்கின்றார்.

அமைதி முயற்சிகளுக்கு - சமாதான நடவடிக்கைகளுக்கு - இணக்கப் பேச்சு மூலம் பிணக்கிற்குத் தீர்வு காணும் செயற்பாட்டுக்கு - இடமளிக்கும் விதத்தில், தமது துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுத்து, யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றார்கள் புலிகள்.

ஆனால், சமாதான வழியில் தீர்வு காண்பதில் அரசு ஆர்வம் காட்டவில்லை. இந்த யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தித் தன்னைத் தயார் செய்துகொண்டு மீண்டும் ஒரு போர் வெறிப் 'பாய்ச்சலுக்கு' அரசு தயாராகி வருகின்றது என்ற எண்ணம் புலிகளின் தலைமைக்கு வலுத்து வருவதையே துணைப் பொறுப்பாளரின் உரை கோடிட்டுக் காட்டுகின்றது.

சமாதான முயற்சிகள் முன்நகர்வதற்கு மட்டுமல்லாமல், யுத்த நிறுத்தம் செவ்வனவே கடைப்பிடிக்கப்பட்டு, அமைதி நிலை நீடிப்பதற்கும் முக்கியமானது. இரு தரப்புகளிடையேயான பரஸ்பர நம்பிக்கைதான் காரணம். சமாதான முயற்சி கள் முன்நகராவிட்டாலும் ஆகக் குறைந்தது சமாதான முயற்சிகளை முன்நகர்த்தும் ஆர்வம் எதிர்த்தரப்பில் இருக்கின்றது என்ற நம்பிக்கையாவது மறுதரப்புக்கு இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையும் அற்றுப் போனது மட்டுமல்லாமல், மறுதரப்பு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுத் தன்னைப் பெரும் யுத்தத்துக்கு தயார்ப்படுத்துகின்றது என்ற சந்தேகம் - எண்ணம் - கருத்து ஒரு தரப்புக்கு வந்துவிட்டால் அது அபாயக் கட்டம்தான்; விபரீத விளை வுகளை ஏற்படுத்தக் கூடிய நிலைமைதான்.

சரியோ, பிழையோ - முன்னைய அரசின் காலத்தில் - ஐக்கிய தேசிய முன்னணியின் இரண்டுவருட ஆட்சிக் காலத்தில் - அமைதி முயற்சிகள் பெருத்த அளவில் முன்நகராவிட்டாலும், ஆறு சுற்றுப்பேச்சுக்கள் நடந்தேறின; பரஸ்பர நம்பிக்கை ஓரளவுக்கேனும் பேணப்பட்டது; ஆக்கபூர்வப் புரிந்துணர்வு சற்றேனும் நிலவியது.

முழுப் பேரினவாதச் சக்திகளைப் பங்காளிகளாகச் சேர்த்துக்கொண்டுள்ள புதிய அரசின் காலத்தில் அந்த நம்பிக்கை முற்றாகச் சிதைந்து போயிருக்கின்றது. அதை மேலும் மேலும் சிதைக்கும் கைங்கரியம் தினசரி நடந்தேறிக்கொண்டிருக்கின்றது.

1994 - 1995இல் இதேபோல அமைதித்தீர்வு காண்பதற்கு பொன்னான சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. அப்போது எவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்து அந்தச் சந்தர்ப்பத்தைப் போட்டு அடித்தாரோ அதே பொறுப்பற்ற பாணியில் இப்போதும் செயற்பட்டு வாய்ப்பைப் போட்டு உடைக்கத் தயாராகி வருகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்ற எண்ணத்தையே அவரும் அவரது அரசும் இப்போது புரியும் கைங்கரியங்கள் உண்டாக்கிவிருகின்றன.

அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தெரிவித்த கருத்துக்களை முன்னெச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு அரசுத்தரப்பு தன்னைத் திருத்திக் கொள்ளத் தயாராக வேண்டும். இல்லையேல் இம்முறையும் சமாதான முயற்சிகள் குழம்பிப்போவது தவிர்க்க முடியாததாகும்.

அரசு திருந்துமா? தன்னைத் திருத்திக் கொள்ளுமா? அமைதி முயற்சிகள் உயிர்பிழைக்க வகை செய்யுமா?

# போக்குவரத்துக்கு இடையூறாகப் பொருள்களை வைத்திருக்கும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை

## யாழ். போக்குவரத்துப் பொலீஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்29

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக கடைகளின் முன்னால் பொருள்கள் வைத்து விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். நகர்ப்பகுதியில் பல வர்த்தகர்கள் போக்குவரத்துக்கு இடையூறாக கடைகளின் முன்பாக பொருள்களை வைத்து விற்பனைசெய்து வருகின்றனர் என்றும்-

இதன் காரணமாக விபத்துக்கள் இடம்பெறுவதுடன் பாதசாரிகளும் நடந்துசெல்ல முடியாதுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாநகரசபையுடன் இணைந்து யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொலீஸார் கடைகளின் முன்னால வைக்கப்பட்டிருக்கும் பொருள்களை அகற்றுவார்கள் எனவும், இந்த அறிவுறுத்தலை மீறிப் பொருள்களை வெளியில் வைத்து விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதனை மீறிப் பொருள்கள் வைத்து விற்பனை செய்பவர்கள் மீது போக்குவரத்துப் பொலீஸார் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

இதேவேளை, யாழ். கஸ்தூரியார் வீதியில் முதல் தடவையாக பாதசாரிகளுக்காக மாநகரசபையினால் வீதியின் இரு மருங்கிலும் இடப்பட்டுள்ள அடையாளக் கோட்டின் மீது வர்த்தகர்கள் கட்டடப் பணிகளின் சிமெந்து வேலைகளை வீதியில் வைத்துச் செய்து வருவதால் அடையாளக் கோடுகள் அழிக்கப்படுகின்றன.

இனிவரும் நாள்களில் கட்டடப்பணிகளுக்கான சிமெந்து வேலைகளை வீதிகளில் இடப்பட்ட அடையாளக் கோட்டின் மீது வைத்துச் செய்யவேண்டாம் என்று போக்குவரத்துப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (8-7)

# மன்னிப்புடன் படையினரை விடுவிப்பதானது ஒப்பந்தம் மதிக்கப்படுவதற்கு உதாரணம்

## எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

கொழும்புத்துறை,ஜூன்29

தற்போதைய சமாதான காலப்பகுதியில் அரச படைகளில் இருந்து அநேக இராணவத்தினர் மற்றும் கடற்படையினர் விடுதலைப் புலிகளிடம் சரணடைகின்றனர்.

அவர்கள் அனைவரையும் எந்தவித விசாரணையோ, தடுத்து வைப்போ இன்றி அரசிடம் ஒப்படைத்து வருகின்றோம். இதிலிருந்து நாம் போர்நிறுத்த உடன்படிக்கையை எந்த அளவுக்கு மதிக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும் -

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ தேசிய எழச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன்.

மானிப்பாயில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற பேராளர் சங்கம நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்:

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்டச் செயலாளர் சு. சிறில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வல் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

தேசியத் தலைவர் எந்த நேரத்திலும் எதையும் மக்களுக்காக செய்யக்கூடியவர். 30 வருடங்களாக பல துன்பங்களைத் தாங்கி அர்ப்பணிப்புடன் போராட்டத்தை நகர்த்தி வருகிறார். போராளிகளையும் அவ்வாறே வளர்த்துள்ளார். நாம் இலட்சியத்தில் உறுதியாகவுள்ளோம். எம்மை எந்த வகையிலும் வீழ்த்திவிட முடியாது. தனித்து நின்று போராடி எமது இலக்கை அடையப் பக்கபலமாக உள்ளவர்கள் மக்கள்தான்.

அரசியல், இராணுவம் இரண்டிலும் திறமையான தூரநோக்கு சிந்தனையுடன் தலைவர் இந்த இரண்டரை வருடகாலத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

இன்று நாம் ஆயுதங்களை வைத்துவிட்டு மௌனமாக இருக்கின்றோம். இது சமாதான காலமா? சமாதானத்துக்கான காலமா? என்பதை அவதானித்துக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்தும் ஆயுதத்தை ஏந்தி விடுதலை பெறுவதா? அல்லது சமாதானத்துக்காகக் காத்திருக்க வேண்டுமா? என்று மக்கள்தான் தீர்மானிக்கவேண்டும். இதை ஸ்ரீலங்கா அரசுகளும் புரிந்து கொள்ளவேண்டும்.

இது சாத்தியப்படாவிட்டால் வைத்த ஆயுதங்கள் கரங்களில் உயரும். மாற்றங்கள் உருவாக வேண்டுமெனில் நாமும் மாற வேண்டும் - என்றார். (8-30)

## முல்லை. நுண்கலைக் கல்லூரியில் நாளை ஜூன் மாதக் கலை விருந்து

யாழ்ப்பாணம்,ஜூன்29

முல்லை. மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஜூன் மாதக் கலைவிருந்து நாளை புதன்கிழமை மாலை 4 மணிமுதல் புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றல், அகவணக்கம் மற்றும் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் தொடர்ந்து நுண்கலைக் கல்லூரி தற்காப்புக் கலைப் பிரிவு மாணவர்களின் வீரக்கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

மாலை 4.30 மணிக்கு நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் தாளவாத்தியக் கச்சேரி நடைபெறும். நவம் அறிவுக் கூடம், காந்தரூபன் அறிவுச்சோலை ஆகியவற்றைச் சேர்ந்த கலைஞர்கள் பக்கவாத்தியம் வழங்குவர்.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் சிறப்புத் தமிழிசை விருநதில் கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் கலாபூஷணம் பி.குமாரசாமி இசைவிருந்தளிப்பார். ஏ.ஜெயராமன், கே. கண்ணதாசன், எஸ்.ஹரிதரன், என்.சதீஸ்குமார், சதா வேல்மாறன் ஆகியோர் முறையே வயலின், மிருதங்கம், கடம், முகாசிங், தபேலா ஆகிய இசைக்கருவிகளை இசைப்பர். (எ-ரி)

## அமைதிநிலை தோன்றினால்தான் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்

### நாடு திரும்புமுன் சிங்கப்பூர் பிரதமர்

கொழும்பு,ஜூன்29

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கவேண்டுமானால் இங்கு அமைதி ஏற்படுவது அவசியம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கடந்த வெள்ளியன்று கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் நடைபெற்ற தொழிலதிபர்கள் கூட்டமொன்றில் உரையாற்றிய சிங்கப்பூர் பிரதமர் கோ சொக்டொன்சி. இனப்பிரச்சினையை இலகுவில் தீர்த்துவிடமுடியாது. ஆனால் அமைதியும் ஸ்திரமும் நிலவினால்தான் அந்நிய மூலதனத்தைப் பெறமுடியும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கப்பூர் இலங்கையுடன் சுதந்திரமாக வர்த்தக உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இப்பொழுது ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் முதலீடு செய்வதற்கு இலங்கை மட்டுமே ஒருநாடு என்ற நிலையில்லை என்றார்.

சிங்கப்பூர் பிரதமருடன் ஓர் உயர்மட்டக் குழுவும் வந்திருந்தது. பிரதமர் டொன்சி இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் சிங்கப்பூர் திரும்பினார்.

இலங்கைக்குக் கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்திருந்த அவர், ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்தராஜபக்ஷ உள்ளிட்ட பல அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டார். (ப-8)

### நாளை

ஆனி 16
புதன்கிழமை
(30.06.2004)
திதி : திரயோதசி
இரவு 10.14 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பகல் 02.45 வரை.
சுபநேரம்: 04.26 - 05.56
ராகுகாலம்: 11.56 - 01.26
*பிரதோச விரதம்*
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வாழ்வில் எவ்வளவு பணம் சேர்த்தோம் என்பது முக்கியமல்ல எத்தனை நல்ல உள்ளங்களைச் சம்பாதித்தோம் என்பதுதான் முக்கியம்.

## ஆசிரியர்களுக்கான செயலாற்றுகை தரக்கணிப்பு அடுத்த ஆண்டு முதல்

யாழ்ப்பாணம்,ஜூன்29

ஆசிரியர்களுக்கான செயலாற்றுகைத் தரக்கணிப்புமுறை அடுத்த வருடம் முதல் அமுல் படுத்தப்படும் என வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இத்திட்டத்திற்கமையவே சகல ஆசிரியர்களுக்குமான பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பன அந்தந்தப் பாடசாலை அதிபருடாக அறிவிக்கப்பட்டு தீர்மானிக்கப்படவுள்ளது.

ஒப்பந்தங்களின் பிரகாரம் குறித்த காலத்தில் செய்து முடிக்க வேண்டிய கல்விப் பணிகளை மேற்கொள்ளாத ஆசிரியர்களுக்கு இதனால் தாக்கம் உண்டு என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (8-6)

## அமைச்சர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளுக்குச் செல்வதில்லை

### ஜீ.எல்.பீரிஸிடம் அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

அண்மையில் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் சிலர் ஜனநாயகத்திற்கு முரணான வகையில் ஒழுக்கக்கேடாக நடந்து குழப்பங்களை விளைவித்ததன் காரணமாக, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லையெனத் தாம் தீர்மானித்துள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸிடம், அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்திரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மகாநாயக்க தேரர் இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றித் தேரர் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டின் அதியுயர் பீடமான நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகிச்செல்லும் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை ஜனநாயக ரீதியாகவும், சுதந்திரமாகவும் எடுத்துக்கூறும் நிலை இருக்கவேண்டும். அதனைக் குழப்பும் வகையில் செயற்படக் கூடாது.

ஆனால், அண்மையில் அதற்கு விரோதமான முறையிலும், ஒழுக்கக்கேடாகவும் நாடாளுமன்ற உறுப்பின்ர்கள் செயற்பட்டதானது, கிராமங்களில் 'இயங்கிவரும் கோப்பிக்கடைகளைப் போன்றே இருந்தன. இது ஒழுக்கமற்ற செயலாகும். இவற்றைக் கண்டு நான் மிகுந்த வேதனையடைகிறேன்

ஆட்சியாளர் நல்லதைச் செய்தால் நாம் அதற்கு ஆசீர் வழங்கவேண்டும். மாறாகத் தவறு செய்தால் அதனை அவர்களுக்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டும். மகாசங்கத்தினர் தங்களை நாடி வருபவர்களிடம் பக்கச்சார்பின்றி நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது நாட்டின் பல இடங்களிலும் விகாரைகளிலும் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் - என்றார்.

இது குறித்து ஜீ.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் உயர்பீடமான நாடாளுமன்றில் இடம்பெற்றுவரும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் கவலையளிக்கின்றன. இந்நிலை மேலும் இடம்பெறாத வகையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒருமித்துக் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (8-ரி)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுன்29

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையான சுபநேரத்தில் நடைபெற வுள்ளது. (-10-117)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கி ழமை வரை தினமும் காலை 10 மணிக்கு விநாயகருக்கு நவகலச அபிஷேகம் மற்றும் விசேட பூசை என்பன இடம்பெறும். (-10-ரி)

★ ★ ★

புலோப்பளை சால வைரவர் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது. (-10-117)

★ ★ ★

கிராஞ்சியம்பதி ஸ்ரீகற்பக விநா யகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 23 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக் கிழமை சங்காபிஷேகம் மற்றும் கும் பாபிஷேக தின நிகழ்வு ஆகியன நடைபெறவுள்ளன. (-10-ரி)

★ ★ ★

வவுனியா, பண்டாரிக்குளம் விபு லானந்தக் கல்லூரியில் அமைக்கப் பெற்ற ஸ்ரீ விபுலநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2ஆம் திகதி காலை 9.11 மணி தொடக்கம் 10.11 மணி வரையான சுபநேரத்தில் நடை பெறவுள்ளது.

★ ★ ★

நவாலி,ஜுன்29

நவாலி சென்பீற்றர்ஸ் பேதுருபாவிலு ஆலய திருவிழா இன்று செவ்வாய் காலை 7 மணிக்கு இடம்பெறும் கூட் டுத் திருப்பலியைத் தொடர்ந்து திருச் சொரூபப் பவனியும் நடைபெறும். (-10-100)

## மருதங்கேணி அபிவிருத்தி பற்றி நாளை கலந்துரையாடல்

மருதங்கேணி உதவி அரச அதிபா பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய கலந்து ரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப. வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெற வுள்ளது.

இதில் சகல கிராம அலுவலர்கள், கிராம மட்டத்திலான சங்கங்களின் பிரதிநிதி, உள்ளூர் நிறுவன அமைப புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளது. (எ-36)

## சுகாதாரப் பரிசோதகர் இடமாற்றம்

வட்டுக்கோட்டைப் பிரிவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஸ்வரன் காரைநகர் பிரிவுக்கு இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதிமுதல் இவர் காரைநகர் பிரிவில் பதவியைப் பொறுப் பேற்றுள்ளார். (எ-15)

## தவறிவிட்டது

எனது 500-1038 இலக்கமுள்ள மோட் டார் சைக்கிளின் பின்வரும் ஆவணங்கள் நேற்று 28.06.2004 சாவகச்சேரி பஸ்நிலை யத்தில் தவறிவிட்டன.

1) பதிவுச்சான்றிதழ்
2) காப்புறுதிப் பத்திரம்
3) வரி அனுமதிப்பத்திரம்
4) சாரதி அனுமதிப்பத்திரம்
5) ஸ்ரான்லி வீதிமக்கள்வங்கிசேமிப்பு கணக்கு புத்தகம்

இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன்.

க.கேதீஸ்வரன் (ஓய்வுபெற்ற பிரதேச செயலர், நுணாவில் மத்தி, சாவகச்சேரி)
செல்வம் கூல்பார், சாவகச்சேரி புதியசந்தை.
தொலைபேசி. 060 2213279, 0777 110663 (33595)

## விற்பனையாகிறது

இலங்கைப்படம் - கலர் - சுவரில் மாட்டத்தகுந்த அமைப்பு
ரூபா 250/=
தொகையாகப் பெறுபவாகளுககு 10 % கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
☏ 021-222-2573 (C/35892)(42)

## இன்றைய வெளியீடு

**VCD SONG**
மம்மி செல்லம்மா பாடலுடன்
ஜோர்,
ஆயுத எழுத்து,
பேரழகன்
விலை-100/=
மூர்த்தி வீடியோ
மானிப்பாய். (C/35897)

# திருமண அழைப்பு

நிகழும் தாரண வருடம் ஆனித்திங்கள் 16 ஆம் நாள் (30.06.2004) புதன்கிழமை காலை 8.30 முதல 11.00 மணி வரை அமையப் பெற்ற சுபமுகூர்த்தத்தில்

செல்லப்பா ஆறுமுகம்
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன் திருநிறை செல்வன்
**குகநேசன்** அவர்களுக்கும்
(ஆசிரியர். விக்னேஸ்வரா மகாவித்தியாலயம். குப்பிளான்)



விக்கினராஜா
தம்பதிகளின்
ஏக புதல்வி திருநிறை செல்வி
**அனுஷா** அவர்களுக்கும்
(போதனாசிரியை. தகவல் தொழில்நுட்பப் பூங்கா)

மேற்படி முகூர்த்தம் நல்லூர் கைலாசபிள்ளையார், குப்பிளான் கற்பகப் பிள்ளையார் அனுக்கிரக ஆசியுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று 278, நாவலர் வீதியில் அமைந்துள்ள மணமகள் இல்லத்தில் மாங்கல்யதாரணம் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்து மதியபோசனத்திலும் கலந்துகொண்டு வைபவத்தினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

திருமதி தில்லைமுத்து ஆறுமுகம்
திரு. திருமதி கமலநாதன்
(பதில் முகாமையாளர்,
இலங்கை மின்சாரசபை, வடமாகாணம்)
குப்பிளான் வடக்கு, குப்பிளான்.



திருமதி கௌசலாதேவி விக்கினராஜா
திரு.திருமதி ஞானரெத்தினம்
தம்பதிகள்
278, நாவலர் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம். (சி-35907)(32)

## மானிப்பாய் றோட்டரக்ட் கழகத்தின் அனுசரணையுடன்

**Computer Express மற்றும் IPAS நிறுவனங்கள் இணைந்து நடத்தும்**

## மாபெரும் கணனி மற்றும் தொழில் வழிகாட்டி

## கருத்தரங்கு

***காலம்:*** **02-07-2004 வெள்ளிக்கிழமை**

***இடம்:*** **மானிப்பாய் பிரதேச மண்டபம்**

**நேரம்: காலை 9.00 மணிமுதல்**

※ இக்கருத்தரங்கில் பங்குபற்றும் அனைவருக்கும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

※ இச்சான்றிதழ் வைத்திருக்கும் அனைவரும் Computer Express நிறுவனத்தில் 90 % கழிவுடனும், IPAS நிறுவனத்தில் 50% கழிவுடனும் தம் கல்வியைத் தொடரலாம்.

**உங்கள் அனுமதிச் சீட்டுக்களைப் பெற இன்றே விரையுங்கள்**

**அனுமதிகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன.**

※ நுழைவுச்சீட்டு ரூபா 150/=

※ பாடசாலை மாணவர்கள் விசேட சலுகையுடன் அந்தந்த பாடசாலை அதிபர்கள் ஊடாக நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

※ நுழைவுச் சீட்டுக்களை

| | |
|---|---|
| Computer Express | (இல. 152/1, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்) |
| IPAS | (இல.199, பிரதான வீதி, பிறீமியர் பேக்கரி மேல்மாடி, யாழ்ப்பாணம்) |
| R.T.R Beauty Center | (பிரதான வீதி, மானிப்பாய்) |
| கிறிஸ்ரல் சென்ரர் | (மகாவித்தியாலயம் வீதி, நெல்லியடி) |
| விசிற்றோக். நெற் | (315A, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி) 0212226637 021 2227387 |

ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு: 0777-677079, 0777-283820, 077-3024313

(சி-35900) *செயற்றிட்ட இயக்குநர்.*

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் அங்கத்தவர்களாகிய பொ.சிவலிங்கம், பொ.குலவீரசிங்கம், பொ.அமிர்தலிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ச.பாலசுப்பிரமணியம், இ.வேலாயுதம் ஆகியோரின் அன்பு மாமியாருமாகிய

## திருமதி பொன்னுத்துரை செல்லாச்சி

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினரும், அங்கத்தவர்களும்.

(33591) (43-13-14-33) மா.க.சி.க.உ.கூ.சங்கம், மாவிட்டபுரம்.

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல் - 2004

2004ஆம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்திற்கான ஆதன வரியை 30.06.2004ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத் தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாகக் கீழ் விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத் தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | - 15% |
| ஏனைய காணிகள் | - 20% |

நிலுவை உட்பட 2004ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபை கட்டளைச்சட்டம், அத் தியாயம் 252, பிரிவு XII 252(1) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நட வடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் *மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்* என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28.06.2004 (சி-35901) (33-14-13)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



''தில்லையம்பதி'',
உரும்பிராய்.

அமரர்

## நாகன் செல்லத்துரை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09-04-1932 | 10-07-2003 |

அன்பாய் எமை அரவணைத்து ஆதரித்திட்ட தெய்வமே
ஆண்டொன்று கடந்தாலும் ஆறவில்லை எம்மனது?
ஈண்டு உம் நினைவுடனேயே. இப்புவுலகில் வாழ்கிறோம்.

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைந்தே வாழும்:
**குடும்பத்தினர்.**

(33590)(42)

நூலகம் யாழ்ப்பாணம்

# சாவகச்சேரி நவீன சந்தை முன்றிலில் நிறுத்தப்படும் சைக்கிள்களால் சிரமம்

தென்மராட்சி,ஜூன்29

சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக நிறுத்தப்படும் சைக்கிள்களால் பொதுமக்களும், வாகனங்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதியுடன் அமைந்துள்ள நவீன சந்தையின் முன்பாக பெருமளவு சைக்கிள்கள் நிறுத்தப்படுவதால் காலை வேளைகளில் மாணவர்கள் செல்லும்போது வாகன நெரிசல் ஏற்படுவதாகவும்.

அத்துடன், நவீன சந்தை விறாந்தையின் பெருமளவு இடத்தினை சைக்கிள்களும் வர்த்தக நிலையங்களின் பொருள்களும் ஆக்கிரமித்துள்ளதால் விறாந்தையையும் பொதுமக்கள், மாணவர்கள் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

நவீன சந்தைமுன்பாக சைக்கிள்கள் விடுவதைத் தடைசெய்ய சாவகச்சேரி நகரசபையினரும், பொலீஸாரும் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என பொதுமக்கள் ஆதங்கம் தெரிவித்தனர். (எ-117)

# கரும்புலிகள் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

கரும்புலிகள் தினத்தையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் சிறுகதை மற்றும் கவிதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தேச விடுதலை உணர்வை மையமாகக் கொண்டு ஆக்கங்கள் இருக்க வேண்டும் எனவும் -

'கரும்புலிகள் நாள் போட்டி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஆக்கங்கள் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் -

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்டுள்ளது. (எ-ரி)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.கே. கந்தசாமியின் நினைவு நூல் வெளியீட்டு விழாவில் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் நினைவுச் சுடர் ஏற்றுவதைப் படத்தில் காணலாம். (எ)

# மனித உரிமை ஆணைக்குழுவினரை அவதூறு செய்தனர் பொலீஸார்

## உச்ச நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்படும்

கொழும்பு,ஜூன்29

பொலீஸ் அதிகாரியின் வசிப்பிடங்களில் வைத்து குற்றச்சந்தேக நபர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்கள என்று கிடைத்த முறைப்பாடுகளையடுத்து அவ்விடங்களைப் பார்வையிடச் சென்ற மனித உரிமை ஆணைக குழுவைச் சேர்ந்த மூவரை பொலீஸ் அதிகாரிகள் அவதூறு செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிமால் புஞ்சிஹேவா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

பையாகலை பொலீஸ் முகாங்களிலும் அங்குள்ள சமையல் கூடங்களிலும் குற்றச்சம்பவங்கள் தொடர்பான சந்தேக நபர்கள் துன்புறுத்தப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளின் பேரில் மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்கள் மூவர் அங்குவிஜயம் செய்துள்ளார்கள். அவ்வேளையிலேயே பொலீஸ் உயர் அதிகாரிகளால் அவர்கள் அவதூறு செய்யப்பட்டார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பையாகலை பொலஸாரினால மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் அவதூறுக்குள்ளாக்கப்பட்டிருப்பது இது முதல்தடவையல்ல முன்னரும் இவ்வாறு நடந்திருப்பதாக அறியப்படுகிறது.

இம்முறை மனிதஉரிமைகள் ஆணைக்குழு, இச்சம்பவம் குறித்து உச்சநீதிமன்றத்திடம் முறைப்பாடு செய்ய முடிவு செய்துள்ளது. இதேவேளை களுத்துறைப் பிரிவு பொலீஸ் அத்தியட்சகர் ஜயலத் குணதிலக்க இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்:

பொலீஸ் முகாங்கள் பொலீஸ் அதிகாரிகளின் தனிப்பட்ட வதிவிடங்கள் அங்கே சோதனையிடுவதனால் மனித உரிமை ஆணைக்குழுவினா அவாகளுக்கு முன்கூட்டியே அறிவித்தல் கொடுத்திருக்கவேண்டும் என்றார். (ப)

# மனவிருத்திப் பாடசாலை திறப்புவிழா வெள்ளியன்று

யாழ்ப்பாணம்,ஜூன்29

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் திறப்புவிழா எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக லண்டனைச் சேர்ந்த ம.ஜெயசீலன் கலந்து கொள்கிறார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட நீதிவான் இ.த விக்னராஜா, யாழ். மாவட்ட ஆரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், வைத்திய கலாநிதி கா.சிவபாலன், பேராசிரியர் தயா சோமசுந்தரம், கலாநிதி தி.கமலநாதன் ஆகியோர் நிகழ்துவர்.

சிவபூமி அறக்கட்டளையின் உப தலைவர் க.சிவாஜி நிறைவுரையாற்றுவார். (4-6)

## பயிற்சிக் கருத்தரங்கு

வலி.தெற்கு,ஜூன்29

வலிகாமம் வலய ஜி.ச.ச.உயர்தர மாணவர்களுக்கான உயிரியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று நாளை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-152)

# செய்திக்கொத்து

## வெதுப்பக உற்பத்திகள் குறித்து விஷேட பயிற்சி

தென்மராட்சி,ஜூன்29

வெதுப்பகங்களில் உள்ளீடுகளைக் கட்டுப்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு தரமான உற்பத்திப் பொருள்களை வழங்குவது தொடர்பான பயிற்சி வகுப்பு சாவகச்சேரி பைந்தமிழ் வெதுப்பகத்தில் வெளிநாட்டு நிபுணர்களால் நடத்தப்பட்டது.

பெல்ஜியம் புறாக்மன் கம்பெனியைச் சேர்ந்த உணவு உற்பத்தி ஆலோசகர் பொப் டி மெயர் (BOB DE MEYER) தலைமையிலான பிரதிநிதிகளும் கொழும்பு எஸ்.கே.வெதுப்பக உணவுகள் நிறுவன பிரதிநிதி ஹேமசிறி டி சில்வா உட்பட பலர் இந்தப்பயிற்சி வகுப்புக்களை நடத்தினர்.

இப்பயிற்சி வகுப்பில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர். (எ-117)

## ஆனைக்கோட்டை ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு டாக்டர் நியமனம்

நவாலி,ஜூன்29

யாழ் மாநகர சபையின் ஆயுள்வேத வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்டர் சிறீ கமலாதேவி துரைராசா கடந்த 25ஆம் திகதி முதல் ஆனைக்கோட்டை இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவ்வைத்தியசாலையில் முன்னர் பணியாற்றிய டாக்டர் தவமலர் விஜயரட்ணம் இம்மாதத்துடன் ஓய்வு பெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்கது. (எ-100)

## மட்டுவில் வடக்குக்கு மின் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,ஜூன்29

மட்டுவில் வடக்கு, சந்திபுரம் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மின்விநியோகத்திற்கான மின் கம்பங்கள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டு அந்தந்த இடங்களில் பறிக்கப்பட்டுள்ளன. (எ-117)

## ஆஸ்பத்திரியை தரம் உயர்த்தக் கோரிக்கை

குருநகர்,ஜூன்29

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரைக் கோரும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இவ்வைத்தியசாலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (எ-51)

## ஆஸ்பத்திரி வீதி பலத்த சேதம்

சங்கானை,ஜூன்29

வலி.மேற்கு பிரதேசசபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் எல்லைக்குட்பட்ட சங்கானை ஆஸ்பத்திரி வீதி கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது.

குண்டும், குழியுமாக கடந்த பல வருடங்களாகக் காட்சியளிக்கும் இந்த வீதியூடாக சைக்கிள், மோட்டார்ச் சைக்கிளில் பயணம் செய்வோர் உட்பட பலரும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (எ-29)

## கந்தரனுபூதி கட்டுரைப் போட்டியில் இருவர் பரிசிலுக்குத் தெரிவு

சுழிபுரம்,ஜூன்29

பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தினால் நடத்தப்பட்ட கந்தரனுபூதி ஆய்வுக்கட்டுரை எழுத்துப் போட்டியில் கட்டுரைகள் எழுதிய இருவர் பரிசுக்குரியவர்களாக நடுவர் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செல்வி தனலஷ்மி சிவராசலிங்கம (பண்ணாகம்), செல்வன் சீ.தவசீலன் (பெரியமாவடி - சாவகச்சேரி) ஆகிய இருவரும் இவ்வாறு பரிசில் பெறவுளளனர். (எ-28)

## அபிராமி அந்தாதி நூல் வெளியீடு

சுழிபுரம்,ஜூன்29

அபிராமி அந்தாதி பாடல் முழுவதும் அடங்கிய நூல் ஒன்றை வழக்கம்பரை பஜனைச் சபையினர் வெளியிட்டுள்ளனர். (எ-28)

## சலுகை அடிப்படையில் உழவு இயந்திரம்; சம்மேளனம் ஏற்பாடு

தென்மராட்சி தெற்கில் காலபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் சலுகை அடிப்படையில் உழவு இயந்திரத்தினை வாடகைக்கு வழங்க கைதடி கமநல சேவைகள் நிறுவனத்தினர் முன்வந்துள்ளனர்.

இப்பகுதியில் வெடிப் பொருள்கள அகற்றப்பட்ட ஆயிரம ஏக்கர் நெல வயல்கள் காலபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்படவுள்ளதையடுத்து உழவு இயந்திர சேவையை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## நவாலி பாடசாலையில் புதிதாக மதில் நிறுவ லண்டனில் இருந்து நிதி

நவாலி,ஜூன்29

நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில கல்வி பயின்று தற்போது லண்டனில் வசிக்கும் பழைய மாணவர்கள் அப்பாடசாலைக்கு மதில் கட்டுவதற்கு ஐம்பதாயிரம் ரூபா பணத்தினை அனுப்பி வைத்துள்ளனர். இப்பணத்தைக் கொண்டு புதிய மதிலொன்று அமைக்கப்பட்டுவருகினறது. (எ-100)

## ஆழியவளை வீதி புனரமைக்கப்படும்

மருதங்கேணிச்சந்தியிலிருந்து ஆழியவளை செல்லும் பிரதான வீதி புனரமைக்கப்படவுள்ளது. கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் இந்த வீதியின் இரு மருங்கிலும் காடுகள் வளர்ந்து வீதியை மூடுமளவுக்கு காணப்படுகின்றன.

இவ்வீதியைப் புனரமைத்துத் தரும்படி அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து மருதங்கேணி உதவி அரச அதிபர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். வீதி அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளைச்செய்துள்ளது. (எ-36)

## புதிய விவசாய போதனாசிரியர்

திருநெல்வேலி மாவட்ட விவசாயப பயிற்சி நிலையத்தில் பண்ணை முகாமையாளராகக் கடமையாற்றி வந்த சரவணமுத்து சிவநேசன் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் உடுவில் கமநல சேவை நிலையத்தில் விவசாயப் போதனாசிரியராக நியமனம் பெற்று பதவியேற்றுள்ளார்.

ஏற்கனவே, விவசாய போதனாசிரியராகக் கடமையாற்றி வந்த செல்வி டி.எஸ்.சொலமன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதை தொடர்ந்து இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது. (எ-152)

## கந்தன்காடு மயானம் சிரமதானம் மூலம் துப்புரவு

கோப்பாய்,ஜூன்29

கோப்பாய் கந்தன்காடு இந்து மயானம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன், இப்பகுதிப் பொதுமக்களால் சிரமதான அடிப்படையில் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.(எ-72)

## நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கோப்பாய்,ஜூன்29

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-72)

## எரிபொருள் நிலையங்களுக்கு மீற்றர் பம்புகள் கிடைத்தன

யாழ். நகரப் பகுதியில் உள்ள இரண்டு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு லங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் இரண்டு மீற்றர் பம்புகள் வழங்கப்பட்டுள்ளன.

முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தின் டீசல் விநியோகத்திற்கு ஒரு புதிய மின்சாரப்பம்பும்-யாழ்.மாக்பெட் விற்பனை நிலையத்தின் பெற்றோல் விநியோகத்திற்கு சற்(z) வடிவிலான மின்சார கம்பியூட்டர் பம்பும் வழங்கபட்டுள்ளன. (எ-17)

## மானிப்பாய் கிளைகளில் உலர் உணவு நிவாரணம்

நவாலி,ஜூன்29

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க கிளைகளில் 124 'ஏ', 'பி' இற்குரி நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (எ-100)

## ஆனைக்கோட்டை பாடசாலைக்கு நிரந்தர அதிபர் இல்லை

நவாலி,ஜூன்29

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமுணிய வித்தியாசாலை கடந்த 6 மாதங்களுக்கு மேலாக நிரந்தர அதிபர் இலலாமல் இயங்கிவருகின்றது.

நீண்டகால்மாக இங்கு சேவையாற்றி வந்த அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து இதுவரை நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை.

மேலும் இங்கு பணியாற்றிய ஆசிரியர்கள் சிலரையும் வேறுபாடசாலைகளுக்கு கல்வித்திணைக்களம் இடமாற்றம் செய்துள்ளதால், பாடசாலையின் கல்வி வளர்ச்சி குன்றிவருவதாக பெற்றோர் மத்தியில் கவலை தெரிவிக்கப்பட்டது. (எ-100)

## வீதி இல்லாததால் கோணாவளை மக்கள் பெரும் சிரமம்

தென்மராட்சி,ஜூன்29

சரசாலையில் உள்ள கோணாவளை என்னும் கிராமத்திற்கு பல வருடகாலமாக நிரந்தரமான வீதியில்லாமல் அப்பகுதியில் வாழும் 44 குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

சரசாலை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட இக்கிராம மக்கள் வயல்களின் வரம்பு ஊடாகவே இதுவரை காலமும் தமது போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் -

தமது போக்கு வரத்திற்கு நிரந்தர வீதி அமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஒரு கிலோ மீற்றருக்கு குறைந்த தூரமான சரசாலைக்கு மழை காலத்தில் வயல் வரம்புகளூடாகச் செல்ல முடியாததால் மூன்று மைல்களுக்கு மேல் மந்துவில் ஊடாகச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தரபபில் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## வறிய மாணவருக்கு கற்றல் உபகரணம்

குருநகர்,ஜூன்29

யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கிச் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்கும் நிகழ்வையும், வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள வழங்கும் நிகழ்வையும் அண்மையில் யாழ். நகர் கிழக்கு வலய அலுவலகத்தில் நடத்தியது.

யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முகாமையாளர் ம.கியுமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ் பிரதேசசெயலர் பா.செந்தில் நந்தனன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் பா.மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வறிய மாணவர்கள் 15 பேருக்கு கற்றல் உபகரணங்களும், சுயதொழில் கடனை 10 பேருக்கு தலா ரூபா ஐயாயிரமும் வழங்கப்பட்டது. (எ-51-30)


## ஆங்கில தினப் போட்டியில் மூவருக்குப் பரிசில்கள்

வடமராட்சி,ஜூன்29

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் யாழ். மாவட்டாதியில் நடத்தப்பட்ட ஆங்கில தினப போட்டியில் பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் பரிசு பெற்றுள்ளனர்.

13ஆம் ஆண்டுக்கான பார்த்தெழுதுதல் போட்டியில் செல்வி கே.ஜானினி, முதலாமிடத்தையும், பதினோராம் ஆண்டு பார்த்தெழுதுதல் போட்டியில செல்வி எ.அன்ரனி ஜசிந்தா முதலாமிடத்தையும், 9ஆம் ஆண்டு சொல்வதெழுதுதல் போட்டியில் மாணவி செல்வி எஸ்.கார்த்திகா இரண்டாம் இடத்தையும், இதே மாணவி ஆக்க எழுத்துப்போட்டியில் மூன்றாம் இடத்தையும்,-6ஆம் ஆண்டு பார்த்தெழுதுதல் போட்டியில் செல்வி மைதிலி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (எ-173)

# விமர்சிக்கப்பட வேண்டியவர்கள் அரசியல்வாதிகள் மட்டும்தானா?



## கவிஞர் வைரமுத்துவுக்குக் கலைஞர் சூடு

சென்னை,ஜுன்29

அரசியல்வாதிகள் மட்டுமல்ல சமுதாயத்திலே இன்று எல்லோருமே விமர்சிக்கப்பட வேண்டியவர்கள் தான. யார் யார் விமர்சனத்துக்கு ஆளாகக் கூடியவிதமாகச் செயறபடுகிறாகளோ அவர்கள் எல்லோருமே விமர்சிக்கப் பட வேண்டியவர்கள் தான். அந்தச் செயற்பாடுகள் திருத்தப்படவேண்டும் என்பதிலே இருவித கருத்துக்கு இடமில்லை.

இவ்வாறு தமிழ்நாடு திராவிட முன்னேற்றக்கழகத்தலைவர் மு.கருணாநிதி சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற சென்னை மணவழகர் (கல்யாணசுந்தரனார்) மன்றத்தின் 48 ஆம் ஆண்டு முத்தமிழ் விழாவில் பேசுகையில் கூறினார்.

இவ்விழாவில் முதலில் பேசிய கவிஞர் வைரமுத்துவின் அரசியல்வாதிகளை விமர்சிக்கும் வகையில் அமைந்த கருத்துக்குப் பதிலளிக்கும் விததத்தில் கருணாநிதி பேசினார். அவர் கூறியதாவது:-

வைரமுத்துவின் உரை ஓர் இலக்கிய உரையாக, வரலாற்றுப் பேருரையாக, நாட்டிற்குத் தேவையான நாட்டு நடப்புக்களை விளக்குகின்ற உரையாக அமைந்திருந்தது. அவர் அரசியல்வாதியைத் தாக்குகின்ற நேரத்தில் மாத்திரம் அதற்கான அடிப்படையை அழகாக அமைத்துக்கொண்டு இறுதியாகத் தன்னுடைய தாக்குதல்கணையை இங்கே விடுத்ததை நான் கவனிக்காமல இல்லை.

யாருடைய விழாவை இங்கே கொண்டாடிக்கொண்டிருக்கின்றோமோ, அந்த வி.கல்யாணசுந்தரனார் - மணவழகர்கூட, அரசியலிலே ஈடுபட்டவர்தான், நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்தான், அரசியல் வாதிகளோடு அவர் நெருங்கிப் பழகியவர்தான், அரசியலிலே கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளைக் கடைப்பிடித்தவர்தான. எனவே, அரசியல் என்பது விலக்கி வைக்கவேண்டிய ஒன்றல்ல, அது நம்முடைய வாழ்வோடு இணைந்த ஒன்று என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் அரசியல்வாதி என்பதால் இவ்வாறு வாதிடுகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. ஒருவேளை நான் அரசியல் வாதியாக இல்லாவிட்டாலும் கூட, அந்த அப்பாவிகளுக்காக (சிரிப்பு) நிச்சயமாக வாதிடுவேன்.

அவர் இங்கே பேசும்போது, தமிழ செம்மொழியாக ஆகிவிட்டது என்பதைப் பாராட்டி, ஏறத்தாழ நூற்றாண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட முயற்சி, பரிதிமாற்கலைஞர் தொடங்கிய அந்த முயற்சி, அதுவும் எப்படிப்பட்ட போராட்டத்தை அவர் தொடங்கினார் என்றால், கர்ஸன் என்ற வைஸ்ராய் பாடப்புத்தகத்திலே தமிழுக்குத் தாய்மொழிக்கு முதலிடம் தரவேண்டுமென்று விரும்பிய போது, அந்தப் பாடம் வடமொழிப் பாடமாக - சமஸ்கிருத பாடமாகத்தான இருக்கவேண்டும் என்று ஒரு கூட்டத்தார் வாதிட்டனர் என்பதை எடுததுக் காட்டினார். பரிதிமாற் கலைஞர் ஆரியர். அதை நான் அழுத்திச் சொல்வதற்கு காரணம், அப்போது ஒரு திராவிடருக்கு இல்லாத உணர்வு அன்றைக்கு அந்த ஆரியருக்கு ஏற்பட்டிருந்தது. தமிழ்தான் பாடமொழியாக இருக்கவேண்டுமென்று அன்றைக்கு வாதிட்டு, தொடர்ந்து ஒரு நூற்றாண்டாகப் பலரும் வாதிட்டு, போரிட்டு இங்கே அமர்ந்திருக்கின்ற மணவை முஸ்தபா போன்றவர்கள் எல்லாம் அதற்காக அறப்போர் நடத்தி இன்று நாம் அந்த வெற்றியைப் பெற்றிருக்கிறோம்.

எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்கின்ற மொழி இத்தனை ஆண்டுக்காலம் செம்மொழி என்ற தகுதியைப் பெறாமல் போனதற்கு என்ன காரணம்? உலகத்தில் 5 ஆயிரம், 6 ஆயிரம் மொழிகள என்று சொல்கிறார்கள். நம்முடைய மணவை எழுதிய கட்டுரை ஒன்றில் அவைகள் எல்லாம் பேசப்படுகின்ற, எழுதுகின்ற அல்லது வழக்கில் இல்லாத மொழிகளின் எண்ணிக்கை என்று அறுதியிட்டுக்கூறி 60 மொழிகள் இன்றைக்கு உலகத்தில் முக்கியமான மொழிகளாகப் பாவனையில் இருக்கின்றன என்றும் அதிலே ஆறுமொழிகள் தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன, ஹிப்ரு, கிரீக் ஆகியவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றையுடைய மொழிகள் என்றும் கணித்திருக்கிறார். அதில் சமஸ்கிருதம் என்றைக்கோ செம்மொழியாக ஆக்கப்பட்டுவிட்டது. தமிழ் ஆக்கப்படவில்லை. ஏனென்று கேட்டால் சமஸ்கிருதம் என்றுமே பேச்சு வழககு மொழியாக இருந்ததில்லை. எழுத்து வழககை மட்டுமே சிறந்த மொழியாகவே ஆக்கப்பட்டுவிட்டது இதற்கு என்ன பொருள்? தமிழும் சாகவேண்டும் என்கிறார்களே? இல்லை, தமிழ் இறந்த மொழியுமல்ல இறக்கப்போகின்ற மொழியுமல்ல. சாகடிக்கமுடியாத மொழி. ஒரு கடைசித் தமிழன் சாகடிக்கப்படாமல் இருக்கின்ற வரை தமிழை எவனும் சாகடிக்க முடியாது. அந்தத் தமிழ்மொழியைச் செம்மொழியாக ஆக்குவதற்கு இவ்வளவு காலம் பெரும்போராட்டத்தை நாம் நடத்தியிருக்கிறோம்.

செம்மொழியாக ஒருமொழி மாறுவதற்கு 11 தகுதிகள் வேண்டும் என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். அந்த 11 தகுதிகளில் மொழியின் பண்பாடு, அதுவும் ஒருதகுதிதான் அதுதவறினால் என்னவாகும் என்பதற்கு ஒருகதையை வைரமுத்து இங்கே சொன்னார்.

மைனா வளர்த்த ஒருவர் வீட்டிற்கு வந்தபோது அது இறந்தது என்ற செய்தியைக் கேள்விப்பட்டு, அது எங்கே என்று கேட்டபோது அதைத் தூக்கி வெளியே போட்டுவிட்டோம் என்று சொன்ன போது, அலட்சியமாகப் போனவர் மீண்டும் வந்து எங்கே என்று கேட்ட போது, அதே பதிலைச் சொல்ல அவர் அழ ஆரம்பித்தார். ஏன் அழுகிறாய் என்று கேட்டபோது, நீங்கள் சொன்னது மைனாவா நான் நைனா என்றல்லவா நினைத்துக்கொண்டு அலட்சியமாகச் சென்றேன் என்ற காரணத்தைச் சொன்னாராம். நைனா என்றால் தந்தை. தந்தை இறந்தால் அவர் அலட்சியம் செய்யமாட்டார். ஆனால், தான் வளர்த்த குருவி மைனா இறந்துவிட்டால் அலட்சியம் செய்வார் என்பது அந்தக் கதையின் கருத்துரை.

இங்கேதான் மொழியின் பண்பாடு வேண்டும் என்று நமக்குத் தெரிகிறது. நைனா என்று வேறு மொழியிலே எடுத்துக்கொண்ட காரணத்தால் தான் அவனுக்கு அந்த உணர்வு வரவில்லை. தமிழிலே அப்பா, தந்தை என்று அழைத்துப் பழக்கப்பட்டிருப்பாரேயானால் அப்படிச் சொல்லியிருக்கமாட்டான். அதற்குத்தான் செம்மொழியாக ஆவதற்கு உன்னுடைய மொழிக்கு எல்லாத் தகுதிகளும் இருக்கிறதா என்று பார்ப்பதற்கு இது ஒரு காரணம். இல்லாவிட்டால் மைனாவிற்கும், நைனாவிற்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடும். அந்த வேறுபாடு தெரிந்து, அந்தப் பண்பாடும் புரிவதற்காகத்தான் அதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்று தகுதிகளிலே ஒரு தகுதியாக இந்தத் தகுதியையும் குறிப்பிட்டிருக்கி றார் என்று கருணாநிதி கூறினார். (ப)





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்த விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு, கலாசாலை அதிபர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி மற்றும் ஆசிரிய மாணவர்களால் வரவேற்கப்பட்டு விழா மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்படுவதையும் - சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரி[illegible]ம்பி ஆசிரிய மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (எ)

## இலங்கையில் சித்திரவதைகளை ஒழிக்க

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக அரசு நீக்கவேண்டும்

## லண்டன் தமிழர் உரிமை மையம் அறிக்கை

லண்டன்,ஜுன்29

ஸ்ரீலங்காவில் சித்திரவதைகளை ஒழிக்கவேண்டுமானால் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்னும் கொடூரமான சட்டத்தை அந்தநாட்டு அரசு உடனடியாக நீக்கவேண்டும். அத்துடன், சித்திரவதை செய்வோரும் தணடிக்கப்படவேண்டும். சித்திரவதைக்குள்ளானவர்களுக்கு நஷ்டஈடும் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு லண்டனிலுள்ள தமிழர் மனித உரிமை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜுன் 26 ஆம் திகதி இடம்பெற்ற சித்திரவதை செய்யப்படுவோருக்கு ஆதரவான ஐநா.சர்வதேச தினத்தை முன்னிட்டு மேற்படி மையம் இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சித்திரவதை என்பது பரவலாக உலகம் முழுவதிலும் பலவிதப்பட்ட முறைகளில் நடைபெறுகின்றது. பெரும்பாலாக சுயநிர்ணய போராட்டம், ஆயுதப்போராட்டம் நடைபெறும் நாடுகளில் போராடுபவர்களின் அரசியல் சிந்தனைகள், குறிக்கோள்கள், முயற்சிகளை முறியடிக்கும் எண்ணத்துடன் சித்திரவதைகள் செய்யப்படுகின்றன.

"சித்திரவதை செய்வதை எந்தவொரு நாடும் யுத்தசூழ்நிலை, உள்நாட்டுக் குழப்பங்கள், அவசரகால நிலைமைகள் போன்றவற்றைக் காரணம் காட்டி நியாயப்படுத்தமுடியாது எனச் சித்திரவதைக்கெதிரான ஐ.நா. சாசனம் கூறுகிறது.

ஐக்கியநாடுகள் சபையின் "சித்திரவதைக்கு எதிரான குழுவின் 27 ஆவது, 28 ஆவது கூட்டங்களில் ஸ்ரீலங்காவில் திட்டமிடப்பட்ட சித்திரவதைகள் நடைபெறறுள்ளமைக்கான ஆதாரங்கள் நன்கு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது".

ஸ்ரீலங்காவில் 1979 ஆம் ஆண்டு ஜுலை 20ஆம் திகதியிலிருந்து நடைமுறையிலுள்ள "பயங்கரவாதத் தடைச் சட்டம்" கைதுசெய்யப்பட்டோர் சித்திரவதைக்கு ஆளாக்கப்படவும், சித்திரவதைமூலம் பெறப்பட்ட வாக்குமூலங்களைக் கைதுசெய்யப்பட்டோருக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்வைக்கவும், சித்திரவதை செய்யும் அரச படைகள் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்ளவும் வழிவகுக்கின்றன.

இலங்கைத் தீவில் தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கில் கடந்த இருபது வருடங்களாக நடைபெற்ற ஆயுதப்போராட்டத்தைக் காரணம்கூறி, ஸ்ரீலங்கா அரச படைகள் தமிழ்மக்களை கைதுசெய்து பல விதப்பட்ட தடுப்புமுகாம்களில் மிகக் கொடூரமான சித்திரவதைக்கு ஆளாக்கி வருவதையும் அவர்களுக்குப் புரியாத சிங்கள மொழியில் வாக்குமூலத்தைப் பெறுவதையும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்டித்துள்ளன.

இவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டோரின் சில தகவல்கள் ஐ.நா. சபை மனித உரிமை அறிக்கைகளில் நன்கு பதியப்பட்டவை. தமிழ்மக்கள் மீதான சித்திரவதைகளை ஸ்ரீலங்காவின் அரச படைகளான பொலீஸ், இராணுவம், கடற்படை போன்றவற்றுடன ஸ்ரீலங்கா அரசின் கூலிப்படைகளான சில தமிழ்க்குழுக்களும் மேற்கொள்கின்றனர்.

சித்திரவதை செய்வதற்கெனச் சில விசேட அரச படை அதிகாரிகள் முன்னணியில் உள்ளனர். இப்படியாகச் சித்திரவதை மேற்கொள்வோருக்கு ஸ்ரீலங்கா அரசு பதவியுயர்வையும், நல்ல சலுகைகளையும் பரிசாக வழங்குவதும் ஸ்ரீலங்காவில் நடைமுறையில் இருந்து வருகிறது.

அரச படைகளினால் பாலியல் வனமுறைக்கு ஆக்கப்படும் தமிழ்ப்பெண்களும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுபவர்களே! பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படும் எல்லாத் தமிழ்ப்பெண்களும் கலாசார காரணங்களுக்காக முன்வந்து முறையிடுவதில்லை. இப்படியாக ஏராளமான சமபவங்கள் நடைபெறுகின்றன. ஆனால், இன்றுவரை ஸ்ரீலங்கா அரசு எததனை சித்திரவதையாளரை நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது.

கடந்தஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.உப மனித உரிமை ஆணைக்குழுவில் உரையாற்றிய ஓர் அரச சார்பற்ற நிறுவனம் 'ஸ்ரீலங்காவில் சமாதானப் பேச்சுக்கள் சித்திரவதையை எவ்விதத்திலும் தடுத்து நிறுத்தவில்லை. சித்திரவதை தொடர்ந்து நடைபெறுகின்றன'! ஆகையால், ஸ்ரீ லங்காவின் தேசிய மனித உரிமை ஆணைக்குழு எனச் சொல்வோர் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறைகாட்ட வேண்டிய அவசியம் உள்ளது எனக் கூறியுள்ளது.

தேசிய மனித உரிமை ஆணைக் குழுவினர் அரச படைகள் சித்திரவதையை மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்த முயற்சிப்பது மட்டுமலலாது, சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கவும் ஒழுங்கு செய்யவேண்டும் - என்று அதில் உள்ளது. (ப)

# கூட்டுறவுத்துறை ஆள்சேர்ப்பு; இனிக் கணனி அறிவும் அவசியம்

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை

அரியாலை,ஜுன்29

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உத்தியோகத்தர்களைப் பதவியொன்றில் நியமனஞ்செய்யும் பொருட்டு வரும் காலத்தில் கல்வித் தகைமையுடன் கணனித் தகைமை அறிவும் அவசியம் தேவை என்று வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் - உத்தியோகத்தர்களை ஆள்சேர்ப்பதற்காக விளம்பரப்படுத்தும்போது கல்வித் தகைமையுடன், கணனித் தகைமை அறிவும் அவசியம் தேவை என்று குறிப்பிடுதல் வேண்டுமென்றும் -

இந்தப் புதிய நடைமுறை கடந்த முதலாம் திகதிமுதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக வும் - அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-17)

# உதவிநன்கொடையைப் பெறுவதில் சில சனசமூகநிலையங்கள் அசமந்தம்

## வலிமேற்கு பிரதேசசபை செயலர் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு,ஜுன்29

வலி.மேற்குப் பிரதேசசபைப் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் சில தமக்குரிய 2003 ஆம் ஆண்டுக்கான சனசமூக நிலையத்திற்கான உதவி நன்கொடைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதில் அக்கறையின்றி இருந்துவருவதாகப் பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உதவி நன்கொடைப்பணம் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் பிரதேசசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டு பல மாதங்களாகி விட்டன என்றும் -

இதுபற்றி இப்பிரிவிலுள்ள சகல சனசமூக நிலையங்களுக்கும் கடித மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது என்றும் ஆனால், சில சனசமூக நிலையங்கள் இதுவரை இந்தக் கொடுப்பனவை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையில், உரிய சனசமூக நிலையங்கள் விரைவில் இக்கொடுப்பனவைப் பெற்றுச் செல்லாவிடத்து இந்த நிதியைத் திணைக்களத்திற்கு திருப்பி அனுப்பிவைக்கும் நிலை ஏற்படும் என்றும் -

எனவே, சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் உடனடியாகத் தமக்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் வலி. மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தார். (எ-135)

# அடி முடி இல்லாத ஓர் ஆபத்தான களை கஸ்குட்டா...

பயிர்ச்செய்கை நிலப்பரப்புகளில் பல்வேறு வகைப்பட்ட களைகள் தோன்றுவதுண்டு. மேட்டு நிலக் களைகள், தாழ்நிலக் களைகள் என இருவேறுபட்ட வகுப்புகளைக் கொண்ட இக்களைகள் அகன்ற இலைகள், ஒடுங்கிய இலைகள், புற்கள், செடிகள என இன்னும் பல வகைகளாகப் பிரிக கப்படும். இவைகள் சுயமாக வளரு பவை. இவற்றைத்தவிர ஒட்டுண்ணி வகையான களைகளும் பரவலாக உள்ளன. இடத்திற்கோ அல்லது உண விற்கோ அல்லது வேறு ஏதாவது ஒரு காரணிக்கோ இன்னொன்றில் தங்கியிருப்பவை குறை ஒட்டுண்ணி கள் எனவும், முற்று முழுதாக இன்னொரு தாவரத்தில் தங்கியிருப்பவை முழு ஒட்டுண்ணிகள் எனவும் அழைக் கப்படுகின்றன. மாமரத்தில் வளரும் குரு விச்சை குறைஒட்டுண்ணி ஆகும். இயக்கச்சிப் பகுதியில் இருந்து கொடிகாமம் வரையில் வீதியின் இருமருங்கிலும் மரங்களில் தொங்கிக்கொண்டிருக்கும் கஸ்குட்டாக்கொடி முழு ஒட்டுண்ணி ஆகும்.

அண்மைக் காலத்தில் தீவகத்தில் நாரந்தனை, புளியங்கூடல் போன்ற பகுதிகளில் வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களை இவ்வகையிலான சிறிய அடிமுடியில்லாத கஸ்குட்டாக களையானது தாக்கியுள்ளது. இது ஆபத்தான ஒரு களையாகும். இதன பரம்பல் தீவகத்தில் மட்டுமல்ல, ஏனைய பகுதிகளுக்கும் பரப்பிச் சேதத்தை ஏற படுத்தக் கூடுமாகையால் இக்கட்டுரையில் கஸ்குட்டாவின் பரம்பல், கட்டுப் படுத்தும் முறை என்பன ஆராயப்பட்டுள்ளன.

### கஸ்குட்டாவின் வகைகள்

முழுஒட்டுண்ணியான இத்தாவரம முளைப்பதற்கு விருந்து வழங்கி தேவையில்லை. இருப்பினும் தனது வாழ்க்கை வட்டத்தை முடித்துக் கொள்ள வேறொரு தாவரத்தில் தங்கியிருக்கும். இதில் பல இனங்கள் உண்டு. இலங்கையில் பொதுவாக கஸ்குட்டா இண்டிகா, கஸ்குட்டா பிளனி பிளோரா, கஸ்குட்டா கம்பெஸ்ரிஸ் போன்ற வகைகள் அடையாளம் காணப் பட்டுள்ளன. முதல் இரண்டு இனங்களும் பெரிய மரங்களையும், செடிகளையும் தாக்கினாலும் மூன்றாவது வகையான கஸ்குட்டா கம்பெஸ்ரிஸ்சே பயிர் வகைகளைத் தாக்குவதாகும்.

### அடையாளம் காணுதல்

செம்மஞ்சள் அல்லது மஞ்சள் நிற மான நூலைப் போல சிறிய கொடிகளைக் கொண்ட இத்தாவரம், முத லில் தாவரத்தின் தண்டுப்பகுதியைச் சுற்றி வளரும். ஓரிரு நாள்களில் விரைவாக வளர்ந்து ஏனைய பகுதிகளையும் சுற்றிக் கொள்ளும். ஒரு விதையில் இருந்து தோன்றும் கொடியானது ஏறக் குறைய பத்து அடி விட்டளமளவிற்கு உள்ள தாவரங்களில் சுற்றிப் பரவி வளரும். இதனால், இத்தாவரத்தின் தோற்றம், முடிவு என்பன சரியாகக் காணப்படுவதில்லை. இதனாலேயே அடி முடியில்லாக் கொடி என அழைக கப்படுகிறது. அநேக தாவரங்களைச் சேதமாக்கும் இத்தாவரம், பயிர் நிலப் பரப்பில் தொட்டந்தொட்டமாக ஆரம் பத்தில் பரவும். அதிவேகமாகப் பரவும் தன்மை உள்ள காரணத்தினால் 10 அல்லது 15 நாள்களுக்கிடையில் முழுத் தோட்டத்தையுமே மூடிக்கொள்ளும். இக் கொடிகளில் இலை இருக்காது. சிறிய பூங்கொத்துக்களில் பல்லாயிரக்கணக்கான விதைகள் தோன்றும்.

### எப்படிச் சேதப்படுத்தும்

இக் களையானது, கோழியின் கால ஒன்றை தலைமயிர்க் கற்றை சுற்றிப் பிடித்திருப்பது போல தாவரத்தைத் தாக்கும். முதலாவதாகத் தாவரத்திலிருந்து நீரையும் உணவையும் எடுக கும். இதனால், தாவரம் நலிந்து இறக் கும். இரண்டாவதாகத் தாவரத்தை வளரவிடாது தடுக்கும். வைரஸ் நோயுள்ள தாவரத்தில் இருந்து வைரஸ் இல்லாத தாவரத்திற்கு வைரஸைக் காவிச் செல்லும். இதனால், சிறியளவில இருந்து பெரியளவில் அதாவது முற றாகவும் சேதத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

### கஸ்குட்டாவின் பரம்பல்

இந்த முழு ஒட்டுண்ணிக் களைக்கு முட்கள் இல்லாத தடிப்பான தண்டுகள் இல்லாத, எந்தச் சிறு செடி, கொடிகளும் மாற்று விருந்து வழங்கிகளாகும். பயிர் இல்லாத் காலங்களில் இம் மாற்று விருந்து வழங்கிகளில் வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்திசெய்யும் அத்துடன் குறுகிய காலத்திலேயே அநேக எண்ணிக்கையில் சிறிய விதைகளைத் தோற்றுவிக்கும். நிலத்திலே அநேக நாள்களுக்கு இவ் விதைகள வாழத்தகவுடையதாய் இருக்கும்.

ஒட்டும் தன்மை உள்ளதால் விலங்குகள், பறவைகள் மற்றும் மனித நடமாட்டங்களின் மூலம் இவ் விதைகள் ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத் திற்குப் பரவும்.

பாரமற்ற சிறிய விதைகளானதால் மழை வெள்ளத்துடனோ நீர்ப்பாசன நீருடனோ ஓரிடத்தில் இருந்து இன் னோர் இடத்திற்குப் பரவக்கூடும். இக் களையின் தாக்கத்திற்குட்பட்ட தாவரத்தை ஆடு, மாடுகள் உண்பதால் அவற்றின் சாணங்களோடு இவற்றின் விதைகள் சென்று அச்சாணங்களைப் பயிர்களுக்கு இடுவதால் அவற்றினூடாகவும் இவ்விதைகள் பரவும்.

நீர்ப்பற்று அதிகமாக உள்ள கிணற றடிப் பகுதிகளில் இவை முதலில் முளைத்து ஏனைய இடங்களுக்குப்பரவும்

**சி.ஜே.அரசகேசரி - ப.செல்வநாதன்**
**ஆராய்ச்சி அலுவலர்கள்,**
**விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி.**

### கட்டுப்படுத்தல்

பொதுவாக இவ்வகையான ஆபததான கொடியகளைவகைக ளின் சேதத்தை வருமுன் காத்தலே சிறந்த தாகும்.


★ விவசாயிகள் முடிந்தளவு தமது பயிர் செய்யும் இடங்களைப் பருவ காலத்திற்கு முன்பும் பயிர்ச் செய் கைக்குப் பின்பும் சுத்தமாக வைத்திருத் தல் வேண்டும். பருவ மழைக்கு முன்பே பற்றைகள், பூண்டுகள் என்பவற்றை வெட்டி எரித்தழித்தல் வேண்டும். காய்ந திருக்கும் பயிர் மீதிகளும் அவ்வாறு அகற்றப்படல் வேண்டும்.

★ பருகாலத்தில் ஆரம்ப மழைக்கு முளைக்கும் எல்லாக் களைகளையும் கட்டுப்படுத்துவதற்கு முழுமையான களை நாசினியான கிளைபோசெற் (GLYPHOSATE) விசிறல் வேண்டும். இவ்வாறு விசிறுவதால் சகல களைகளும் கட்டுப்படுவதோடு கஸ்குட்டா தாம தமாக முளைத்தாலும், முளைத்த கஸ்குட்டாச் செடிகளுக்கு உணவு வழங்கிகள் இல்லாதிருக்கும். இக் களை நாசினி விசிறிய 15 நாள்களின் பின் உழுது பயிர்ச் செய்கைக்குரிய ஆயத்தங்களை மேற்கொள்ளலாம். வெங்காயத்திற்கோ அல்லது மிள காய்க்கோ நடுகையின் பின்பு 'அலக் குளோர்' என்னும் தெரிவான களை நாசினியை விசிறுவதால் முப்பது தொடக்கம் நாற்பது நாள்கள் வரை ஏனைய களைகளைக் கட்டுப்படுத்துப் படுவதோடு, கஸ்குட்டாக் களைகள் அழிந்து விடவும் வாய்ப்புண்டு. வெங் காயம், மிளகாய்ச் செடிகளில் இருந்து அறுவடையையோ மீதிப் பொருள்க ளையோ ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்லும் போது பயிர செய்யும் பகுதிகளினூடாக எடுத்துச் செல்வது தடுக்கப்பட வேண்டும். இதனால் இக் கஸ்குட்டா களைகள் பரவுவது தடுக்கப்படும்.

சில பகுதிகளில் கஸ்குட்டா தாவரத் தின் தாக்கம் அறியப்பட்டிருப்பின் அப் பகுதிகளில் இருந்து விதைப் பொருள கள் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

### அழித்தல்

★ இக் களைகள் பயிர்ச்செய்கை நிலங்களில் தென்பட்டால் உடனடி யாக கஸ்குட்டா கொடியும், அது தாக கப்பட்ட தாவரமும் அடியோடு பிடுங்கி எறியப்பட வேண்டும். இக் களையின் சிறிய பகுதிகூட இலைகளிலோ, தண்டு களிலோ அகற்றப்படாது விடப்படின் அது மீளவும் வளர்ந்து பெருக வாய்ப



புண்டு.

★ இக் களையைக் கட்டுப்படுத்தும சிறப்பான களைநாசினிகள் இல்லா ததால் பொறிமுறை அழித்தலே மிகச் சிறந்த பரிகாரமாகும்.

### எச்சரிக்கை

அதிக பரம்பலையும் அதிக சேதத தையும் இக்களை ஏற்படுத்துமாதலால் தீவகப்பகுதி விவசாயிகள் விழிப்பாக இருத்தல் வேண்டும். பருவ காலத்திற்கு முன்னரே எச்சரிக்கையோடு பயிர்ச் செய்கையை ஆரம்பித்தால் இக் கொடிய களையின் தாக்கத்திலிருந்து தீவுப்பகுதி விவசாயிகள் மாத்திரமன்றி ஏனைய பகுதி விவசாயிகளும் பாது காக்கப்படுவர்.

"விவசாயிகளே கவனம்
அடிமுடியில்லாக் கொடி - ஓர்
ஆபத்தான பேர்வழி" ✦

**கமமும் புலமும்**
**தயாரிப்பு: ஜெயஸ்ரீ**

# விவசாய உற்பத்தி முறைகளில் புதிய உத்திகள்; சம்மேளனங்கள் முயன்றால் வெற்றி உண்டு

உலக மயமாக்கல் திட்டத்துக் கமைய எமது நாட்டின் உணவு உற பத்தித் தேவையை நாம் மேற் கொள்ளவேண்டும். GATT எனப்படும் (Global Agreement of Trade & Tariff) தென் ஆசிய நாடுகள் ஒப் பந்தத்தின் கீழ் எமது பாரம்பரிய விவ சாயப் பயிர், உணவுப்பொருள் உற் பத்திகளில் நாம் மாற்றங்களை செய யாதுவிடின பாரிய பின்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். இம்மாற்றங் களை ஏற்படுத்துவதில் விவசாய சம் மேளனங்களுக்குப் பெரும் பங்குணடு.

இலங்கையில் பல்வேறு காலகட் டங்களில் பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகவைத்து விவசாய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன.

தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய் யும் நோக்குடன் பிரித்தானிய அரசு இலங்கையில் பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டியதுடன் விவசாய திணைக்களத்தையும் நிறுவிச் செயற் பட்டது.

உணவுற்பத்தி - விவசாய ஆராய்ச்சி என்பவற்றை அடிப்படை யாக வைத்து இத்திணைக்களம் முத லில் மகா இலுப்பள்ளம ஆராய்ச்சி நிலையத்தை நிறுவியது. தொடர்ந்து பல்வேறு நோக்கங்களுக்காகவும் கண ணுறுவ, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் ஆராய்ச்சி நிலை யங்கள் நிறுவப்பட்டு செயற்பட்டு வரு கின்றன.

இவை விவசாய தொழில்நுட்பத் தகவல்களை வெளியிடும் மூலவள நிலையங்களாகவும், ஆராய்ச்சிப் பிரிவு, விரிவாக்கப்பிரிவு, பயிற்சிப்பிரிவு எனப் பல பிரிவுகளைக் கொண்டும் செயற்படுகின்றன. இவற்றின் நடவடிக கைகளை இலகுவாக்க என நியமிக் கப்பட்ட விவசாய விரிவாக்க உத்தி யோகத்தர்கள் அரசின் கொள்கைக் கமைய பின்னர் கிராம சேவையாளர் களாக்கப்பட்டனர்.

இது விவசாயிகளுக்கும் - திணைக்களத்துக்குமிடையில் பாரிய இடைவெளியைத் தோற்றுவித்தது. இன் றும் கூட தொழில்நுட்பத் தகவல்கள் விவசாயிகளின் பிரச்சினைகள், புள்ளி விவரத்தரவுகள் என்பவற்றின் பரிமாற றத்தில் இந்த இடைவெளி இருந்து கொண்டே வருகின்றது.

### விவசாய அமைப்புக்களின் தோற்றம்

இந்த இடைவெளியை நிரப்பும் முகமாக விவசாய அமைப்புக்கள் தோற்றம்பெற்றன. திணைக்களத்துக் கும் விவசாயிகளுக்கும் இடையில் இணைப்புப் பாலமாக நிறுவப்பட்ட இக்கிராமிய அமைப்புக்கள் தமது செயற்பாடுகளைச் சரியாக நிறைவேற றாதிருப்பது வேதனைக்குரியது. இந்த நிலை எமது எதிர்கால அபிவிருத்திக குச் சிக்கலாகவே அமையப்போகின்றது.

### உலகமயமாக்கல் நிலை

கடந்த நூற்றாண்டுகளாக எமது சுய உணவுத் தேவையை மையமா கக் கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ள நாங்கள், தற்போதைய உலகமயமாக்கல் நிலைக்கேற்ப எமது உற்பத்தியிலும் மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளது. உலகளா விய ரீதியில் தென்ஆசிய நாடுகள் பல GATT (Global Agreement of Trade Tariff, SAPTA (South Asian Priority Agreement) SAF-ATA (South Asian Free Trade Agreement) போன்ற சில ஒப்பந்தங் களைச் செய்துகொண்டுள்ளன.

இதன்படி தென்ஆசியாவிலுள்ள எந்தவொரு நாடும் தனது விவசாய உற்பததிகளைச் சுங்கத் தீர்வையின்றி இலங்கையில் சந்தைப்படுத்தமுடியும். இந்தநிலையில், எமது உற்பத்திகள் பாரிய ஒரு போட்டியைச் சந்திக்க வேண்டியுள்ளன. வெளிநாடுகளில் உற் பத்திகளுக்குச் செலவிடும் தொகை யைப போல குறைந்தளவு செலவில் நாம் உற்பத்திகளைச் செய்யமுடியாது. செலவு, தரம் என்பவற்றில் நாம் போட் டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தரமான, விலை குறைந்த பொருள் களை வாங்கமுனையும் மக்கள், எமது உற்பத்திகளை வாங்கப் பின் நின்றால் எமக்குப் பாரிய நஷ்டமும் பின்னடைவும் ஏற்பட இடமுண்டு. எனவே, இதற்காக என்ன தந்திரோ பாயங்களை நாம் எடுக்கப்போகின் றோம் என்பதே கேள்வி.

### பயிர்ச்செய்கையில் மாற்றம் தேவை

நாம் பாரம்பரிய பயிர்ச்செய்கை களில் இருந்து விடுபட்டுப் புதிய ஒழுங கிற்குள் மாறவேண்டியுள்ளது. தம் புள்ள, குருநாகல் போன்ற சந்தை களை அடிப்படையாக வைத்து மேற் கொண்டுவந்த உற்பத்திகள் மேற் சொன்ன ஒப்பந்தங்களால் பாதிப்படை யும். விலைகுறைந்த, தரமான வெளி நாட்டு உற்பத்திகளை திருநெல் வேலி, சுன்னாகம், நெல்லியடி போனற உள்ளூர் சந்தைகளில் பெறமுடியுமா யின், எமது பாரம்பரிய உற்பத்தி களும் பாதிப்பையும், வீழ்ச்சியையும் எதிர்கொள்ளும்.

எனவே, பாரம்பரிய உற்பத்தி களில் இருந்துவிலகி எவ்வகை உற் பத்திகள் வெளிநாடுகளுடன் போட்டி யிடக்கூடிய முறையில் இருக்கின் றதோ அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்கேற்ப தொழில்நுட் பங்களை வழங்கி உற்பத்திகள் மேற கொள்ளப்படவேண்டும். இதற்கு விவ சாய சம்மேளனங்கள் பெரும் பங் காற்ற வேண்டும். உற்பத்தியில் மட்டு மல்ல உற்பத்திகளைச் சந்தைப்படுத் துவதிலும் சம்மேளனங்கள் ஈடுபட்டுச் செயலாற்றவேண்டும்.

சம்மேளனங்கள் இவ்வாறு செயற படுவதற்கு சேதனப் பண்ணை முறையை ஊக்குவிக்கவேண்டும்.

### சேதனப் பண்ணை

இன்று உலகில் எங்கு பார்த்தா லும் இரசாயனங்களும், கிருமிநாசினி களும் மிகைப்படுத்தப்பட்ட அளவில் உபயோகிக்கப்படுகின்றன. அழகும், கவர்ச்சியும், நிறையும் கொண்ட பொருள்களை வாங்குவதிலேயே நுகர்வோர் ஆர்வம்காட்டும் மனோ நிலை இன்று மாறிவருகிறது. நஞ்சுக் கலப்பற்ற - சேதனப்பொருள்களையே அவர்கள் இன்று பெரிதும் நாடி நிற் பதால் நாமும் அப்படிப்பட்ட பொருள களையே உற்பத்தி செய்யவேண்டும்.

சேதனப்பயிர்ச்செய்கை , அவற்றை மேற்கொள்ளும் வழிமுறைகள், தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைத் தல, சந்தைப்படுத்தல் போன்ற நிலை களில் விவசாய சம்மேளனங்கள் வழி காட்டிச் செயற்படவேண்டும். கிரா மிய ரீதியில் வேறு அமைப்புகள் இதில் செயற்பட முடியாதநிலையில் விவ சாய சம்மேளனங்களே இதில் முக் கிய பங்காற்றவேண்டும்.

### பழ உற்பத்திக்கு ஊக்கம்

எமது மண்ணில் உற்பத்தியாகும் பழவகைகளுக்கு உலகளாவிய ரீதி யில் நல்ல மதிப்பும் வரவேற்பும் உண்டு. மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், திராட்சைப்பழம் போன் றன சுவையும், இனிமையும் கொண்ட தரமான பழங்களாக இருப்பதால், இவற றின் உற்பத்தியில் விவசாயிகள் துணி வுடன் ஈடுபடலாம். கல்சியம் செறிந்த செம்மஞ்சள் மண் இங்கு காணப்படு வதே இச்சிறப்புக்குக் காரணம்.

### விவசாய உற்பத்தியில் சம்மேளனங்களின் பங்கு

பொருளாதாரம் என்பது எந்த இடத்திலும் முக்கியத்துவம் பெறுகின் றது. எனவே, பொருளாதாரத்தை அதி கரிக்க, உற்பத்திகளின் தரத்தை அதி கரிக்கச்செய்வதற்கான வழிமுறை களை விவசாய சம்மேளனங்களூ டாக விவசாயிகளுக்கு வழங்கவேண் டும். இன்றைய உலக ஒழுங்குக்

**வி.பி.சர்மா**

கேற்ப தொழில்நுட்பத் தகவல்களும் பரிமாற்றங்களும் இடம்பெறவேண்டும்.

1990 இற்குப் பின் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல நிறு வனங்கள் கோடிக்கணக்கான பணத்தை உதவு தொகையாகவும், உள்ளீடுகளா கவும் வழங்கிவருகின்றன. இவையாவும் சரியானமுறையில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்குச் சென்றடைவ தில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் பௌர்ணமி தினவிழா

தென்மராட்சி,ஜுன்29

சாவகச்சேரி பிரதேச சபையின் அனுசரணையுடன் கச்சாய் பொது நூலக அபிவிருத்திச் சபையின் கலை கலாசார பிரிவினர் நடத்தும் பௌர்ணமி விழா எதிர்வரும் இரண்டாம் திகதி நண்பகல் 12.00 மணியளவில் கொடிகாமம - பருத்தித்துறை வீதியில உள்ள பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நூலக அபிவிருத்திச் சபைத் தலைவர் கு.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் எஸ். இராமச்சந்திராவும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கலாசார அலுவலர் செல்வி எஸ்.பத்மராணி மற்றும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் இ.சோதிநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(எ-117)

## சோமசுந்தரப்புலவரின் சிலையை நவாலியில் நிறுவ ஏற்பாடு

நவாலி,ஜுன்29

நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் உருவச்சிலையினை நவாலியில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நவாலி அரசடி மகாவித்தியாலயத்தினர் இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-100)


## இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்..!

கொழும்பில் பிரபல ஆசிரியையான செல்வி R. சோபி அவர்களால் யாழ்ப்பாணத்திலும் பின்வரும் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன

- Cake Icing/Decorating:
  - i)Wedding Structures
  - ii)Nozzels Flowers
  - iii)Wilton Sugar Flowers
- Birthday Cakes (15 Methods)
- Bridle Makeup.
  - i)Hair Style
  - ii)Eye Brow Shape
  - iii)Nature Facial
  - iv)Normal Facial
  - (Hindu, Christian, Buddhist)
- Costume Jewellery
- Pot painting
- Saree Painting

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
எனவே உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

(33578)42-11-19)

குறிப்பு: இவற்றிற்கான Order களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: T.P .: 0114817245
50,பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


## நீங்கா நினைவலைகளின் ஆறாவது திங்கள்

தோற்றம்
11
12
1947



மறைவு
29
12
2003

### திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

ஆறு திங்கள் சென்றாலும்
அறுபது அகவை போனாலும்
மாறுமோ உன் நினைவுகள்- நெஞ்சமெல்லாம்
ஆறுமோ எம் சோகம் மறந்து

பிறவிகள் பல உனக்கு இருக்கலாம்
பிறவா வரமும் நீ பெற்றிருக்கலாம் - ஆனாலும்
பிறவி ஒன்றாவது எடுத்து மீண்டும் நீ
பிறந்து வரவேண்டும் எம்மிடம்

அருவமாக இப்போது இருக்கும் நீ
உருவமாக மீண்டும் எம்மிடம் வரும்
நாளுக்காகக் காத்திருக்கிறோம்.

கணவர்,
மகன்,
உறவினர்கள்.

சிவன் கோயிலடி,
பருத்தித்துறை.

(33469)(39-11-19-42)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 - 03 - 1932



மறைவு
10 - 06 - 2003

### திருமதி முருகேசு சின்னம்மா

திதி: 29.06.2004

ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்ட எம் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

60/1. ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.

(33451)(36-11-19-42)


# உடனடி வேலை வாய்ப்பு

## தமிழீழத் தேசியத் துணைப்படை

## தமிழீழம்

தமிழீழத் தேசியத் துணைப்படைக்கு உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் முகமாகத் தமிழீழப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை : 18 தொடக்கம் 25 வரை

உடற் தகைமை : தேக ஆரோக்கியம் நன்றாக இருத்தல் வேண்டும்.

சம்பளம் : ரூபா 8,500/= மாதமொன்றுக்கு

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத்துக்கு இன்று 29-06-2004ஆம் திகதியும் நாளை 30-06-2004ஆம் திகதியும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

குறிப்பு: ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர், ஆளணிப்பிரிவு,
காவல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-35741) (32-11-19)

# ஆளும் கூட்டமைப்புக்குள் முற்றுகின்றது முரண்பாடு!

## கவலைப்பட நேரிடும் என்று ஜே.வி.பி. எச்சரிக்கிறது

கொழும்பு,ஜூன்29

ஆட்சியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் கருத்து வேறுபாடுகளும், கொள்கை முரண்பாடுகளும் உச்சக்கட்டத்தை எட்டியிருக்கின்றன.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஜே.வி.பியினரும் நேரடியாகவே முட்டிமோதிக் கொள்ளும்நிலை கூடியவிரைவில் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஸ்ரீல.சு.கட்சியின் மூத்த தலைவர்கள் சிலரும், சிரேஷ்ட அமைச்சர்களும் ஜே.வி.பியினரைக் கிள்ளுக்கீரையாகவே நடத்துகின்றனர். எந்தவொரு விடயத்திலும் ஜே.வி.பியினரை அவர்கள் கலந்தாலோசிப்பதில்லை. தன்னிச்சையாகவே முடிவுகளை எடுக்கின்றனர் என ஜே.வி.பியினர் நெருப்பெடுக்கின்றனர்.

ஆனால், ஸ்ரீல.சு.கட்சியினரோ நாம் ஆட்சி செய்கின்றோம். எங்களுடையதே பிரதான கட்சி. ஜே.வி.பியோ எங்களுடன் ஒட்டிக்கொண்டிருப்பது. இவர்களுடன் ஏன் ஆலோசிக்க வேண்டும்? - எனக் கேட்கின்றனர்.

சில மூத்த அமைச்சர்கள் இதனை வெளிப்படையாகவே கூறுகின்றனராம்.

12ஆவது நாடாளுமன்றத்தில் 16 பேராக இருந்த ஜே.வி.பியினர் இப்போது 39 பேராக அதிகரித்திருக்கின்றனர். இதற்குக் காரணம் ஜனாதிபதியின் தாராளப் போக்குத்தான். அவர் ஜே.வி.பியினருக்கு அதிக இடம் கொடுத்துவிட்டார். இதனால், இப்பொழுது எம்மை அதிகாரம் பண்ண அவர்கள் முனைகின்றனர். இதை அனுமதிக்கமுடியாது எனப் பல சிரேஷ்ட அமைச்சர்கள் தமது தலைமையிடம் நேரடியாகவே கூறிவருகின்றனர்.

இந்த நிலைமை நீடித்தால் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலிலும் மேலும் பல இடங்களை ஜே.வி.பியினருக்குத் தாரைவார்க்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் இந்த சிரேஷ்ட அமைச்சர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிகிறது.

இதேசமயம் -

### எச்சரிக்கை

ஜனாதிபதி ஐக்கிய தேசியக்கட்சியை ஓரங்கட்ட அரச ஊடகங்களைத் தன்வசப்படுத்தியது போல் ஸ்ரீல.சு.கட்சியினரும் ஜே.வி.பியினரை ஓரங்கட்ட அரச ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் என்று ஜே.வி.பியினர் சீறுகின்றனர்.

இது தமது அரசியல் பிரசார நடவடிக்கைகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று ஜே.வி.பி. கூறுகின்றது.

தனியார் ஊடகங்களும் ஜே.வி.பியினரின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அதேவேளை, அரச ஊடகங்களும் எம்மை இருட்டடிப்புச் செய்கின்றன என ஜே.வி.பியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் வெளிப்படையாகவே சீறிப்பாய்ந்துள்ளார்.

"இந்த அரசிற்கு அடிப்படை அத்திவாரமிட்டு, வெற்றியடையச் செய்தவர்களே நாம்தான். இதை அரசு மறக்கமுற்பட்டால் அதுபின்னர் கவலைப்பட நேரிடும்" - எனவும் ஜே.வி.பி. அமைச்சர் எச்சரிக்கை செய்துள்ளார்.

ஆளும் கூட்டமைப்பின் கூட்டாளிகளான ஸ்ரீல.சு.கவினரும், ஜே.வி.பியினரும் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் தத்தமது செல்வாக்கையும் தனித்துவத்தையும் காட்டுவதில் மும்முரமாகிவிட்டனர்.

முன்பு ஒரேமேடையில் கூட்டமைப்பு பிரசாரம் செய்தவர்கள், இப்பொழுது தனித்தனியாக மேடையேற ஆரம்பித்துவிட்டனர். சிவப்பு மேடைகளில் நீலநிறத்தைக் கூடக் காட்டக்கூடாது என்பதில் ஜே.வி.பியினர் தீவிரமாக இருக்கின்றனராம்.

ஜே.வி.பியினர் வேலைநிறுத்தக்காரர்களின் பின் நின்று முன்னைய அரசுக்குத் தலையிடி கொடுத்தது போல் இப்பொழுதும் வேலைநிறுத்தக்காரர்களுக்குப் பின்புறமாக நின்று தொல்லை கொடுக்கின்றார்கள் - எனவும் ஸ்ரீல.சு.கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

இதனை உறுதிசெய்வது போல் ஜே.வி.பி. அமைச்சர் ஒருவரும் உழைப்பாளர்களுக்காகக் குரல் எழுப்பியுள்ளார். உழைப்பாளர்கள் உதாசீனப்படுத்தப்பட்டால் நாம் (ஜே.வி.பியினர்) பதவிகளையும் உதறித்தள்ளத் தயாராகவே இருக்கினறோம் எனப் பொதுநிகழ்ச்சி ஒன்றில் அவர் பகிரங்கமாகவே அறிவித்துவிட்டாராம். பதவியைத்துறந்து வீதிப் போராட்டம் நடத்துவது எங்களுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ஐ-க)

# பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதிக்கு மின் இணைப்பு வழங்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஜூன்29

பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதிக்கு மின்னிணைப்பு வழங்க ஆவனசெய்யுமாறு அப்பகுதி மக்கள் இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய முகாமையாளரிடம் கடிதம்மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னர் இந்த வீதிக்கு மின்சார விநியோகம் நடைபெற்று வந்தது என்றும்

1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற இடப்பெயர்வுகளாலும் மின்சாரத் தடைகளாலும் மின்விநியோகம் நிறுத்தப்பட்டது என்றும் -

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியில் வசித்துவரும் 25 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இதனால் நன்மையடைவார்கள் என்றும் - அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி இலங்கை மின்சார சபையின் வட்டுக்கோட்டை அலுவலக பொறுப்பதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஏ-135)

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு,ஜூன்29

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களினதும் அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டும்படி எதிர்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்க்கட்சிக் கூட்டணி கடந்த சனியன்று தமது கோரிக்கையை சபாநாயகரிடம் எழுத்துமூலம் சமர்ப்பித்தது.

நாட்டின் பொதுநன்மை குறித்துப் பரிசீலனை செய்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது என்பதால் கட்சித்தலைவர்களின் கூட்டத்தை இவ்வாரத்திலேயே கூட்டும்படியும் சபாநாயகரிடம் அவை வலியுறுத்தியுள்ளன.

எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் சார்பில் கரு ஜெயசூரிய, மஹிந்த சமரசிங்க, வண.அத்துரலிய ரத்ன தேரர், பி.இராதாகிருஸ்ணன், எம்.எஸ்.செல்லச்சாமி, ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கோரிக்கைக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (க)

# நாடாளுமன்றக் கதிரைகளால் எதனையும் சாதித்துவிட முடியாது

## மக்கள் பலமே விடுதலைக்கு வழி என்கிறார் சிவனேசன் எம்.பி.



வலி.வடக்கு,ஜூன்29

நாடாளுமன்றக் கதிரைகளை நிரப்புவதன் மூலம் எந்தவொரு பயனையும் அரசிடம் இருந்து பெறமுடியாது.

நாடாளுமன்றத்தில் இருப்பதிலும் பார்க்க மக்களுடன் மக்களாக வன்னியில் ஒன்று திரண்டு இராணுவத்தை விரட்டியடித்ததைப் போன்று இங்கும் விரட்டியடிப்பதன் மூலமே எமது விடுதலையைப் பெற்றுக் கொள்ளமுடியும். மேற்கண்டவாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவனேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது பேராளர் சங்கமம் மானிப்பாய் பட்டினசபை. ரவீந்திரன் கலைமண்டபத்தில் கடந்த சனியன்று நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழககில் வாழும் அனைத்துத் தமிழ்மக்களும் தமிழ்த் தேசியத்தின் பால் உள்வாங்கப்பட வேண்டும். அதற்கான செயற்பாடுகளை நாம் அனைவரும் இணைந்து முன்னெடுக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

சிங்கள அரசிடம் தமிழ்மணைப் பாதுகாப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. இந்நிலைமைகளைப் பார்க்கும்போது நாடாளுமன்றக் கதிரைகளைத் தூக்கி எறிவதே மேலானதாகும்.

நாடாளுமன்றத்தில் நாம் கூறும் கருத்துக்கள் யாவும் அங்குள்ள சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களினால் எள்ளிநகையாடப்படுகின்றனவே ஒழியப் பிரயோசனமானவையாக அமையவில்லை.

இதிலும் பார்க்க ஒருகொள்கை இலட்சியப்பற்றுடன் ஒருபாதையில் செல்வதே சிறந்ததாகும். தேசியத்தின் தலைமையை நாம் நம்பவேண்டும் ஒற்றுமைப்பட்டு ஒருதலைமையின் பின்னால் நாம் நிற்பதன் மூலமே எதனையும் சாதிக்கமுடியும்.

நாடாளுமன்றத்திற்கு செல்வதன் மூலம் எதனையும் சாதிக்கமுடியாது என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

சந்திரிகாவுடன் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாடியபோது அவரின் உண்மை நிலையை உணரமுடிந்தது.

அவரின பேச்சும் அறிக்கைகளும் கூட முரண்பட்டதாகவே அமைந்துள்ளன. எமது சுதந்திரத்தை நாம்தான் பெற்றுக்கொள்ளவேண்டும்.

தற்போதைய அரசின் உண்மையான நிலைமையையும் செயற்பாட்டையும் மக்களுக்கு உணரச்செய்ய வேண்டும். இங்கு வைக்கப்பட்ட முனமொழிவுகள் பலவற்றை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மக்களுடன் இணைந்து நிறைவேற்றிக்கொள்ள முடியும். சிங்கள அரசு எமக்குத் எந்தவொரு உதவியையும் செய்யப்போவதில்லை.

வலுவான - உறுதியான - தெளிவுள்ள கொள்கைப்பற்றுடைய ஒரு கூட்டமைப்பை எம்மக்களிடையே ஏற்படுத்திக் கொண்டோமாக இருந்தால் எமது விடுதலையை நாமே பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார். எழுச்சிப் பேரவைக் கூட்டத்தில் பலரும் உரை நிகழ்த்தினர். (-4-5-30-86)

# கல்விச்சாலைக் காட்சிகள்




தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக்கிளையினால் "சிசு உதான" சேமிப்பு அலகு ஆரம்பித்துவைக்கப்பட்டபோது, மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் கணக்கினை ஆரம்பித்து மாணவியொருவருக்கு கணக்குப் புத்தகத்தையும் கணக்கின் பரிசினையும் வழங்குவதைப்படத்தில் காணலாம். *(10-13)*



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் முறைசாராக்கல்விப்பிரிவின் உடையமைத்தல் பயிற்சி நெறிக்கான அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முறைசாராக்கல்விப் பொறுப்பதிகாரி எஸ்.சிவானந்தன் பயிற்சிநெறியைத் தொடக்கிவைப்பதையும், அருகில் பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுமார், ஆசிரியர்களான எஸ்.கணேசமூர்த்தி, செல்வி எம்.டயனேஸ்வரி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்:கோண்டாவில் செய்தியாளர்)*



யாழ்.மத்திய கல்லூரி தமிழ்நூல் வெளியீட்டுப் பிரிவின் 'திருவடி சூட்டுப் படலம் வினாவிடைத் தொகுப்பு' நூல் வெளியீட்டு விழாவில், நூலாசிரியர் நாக.தமிழிந்திரனிடமிருந்து வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி விஸ்வதேவி புஸ்பநாதன் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். *(-10)*



கட்டுடை சைவவித்தியாசாலை இல்லமெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதிபர் கடவுள் சுப்பிரமணியத்தினால் மலர்மாலை சூட்டி வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தலைவர் சி.முதலியார், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வ.குகவேள் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்: வலி.தெற்குச் செய்தியாளர்)*

# கண்ணீர் அஞ்சலி



புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்
திரு.செல்லையா தயானந்தா
அவர்களின் மாமனார்

## குமாரவேலு தர்மலிங்கம்

*(பிரபல வர்த்தகர்)*


அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

கோட்டக்கல்வி அதிகாரி,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
**கோட்டக்கல்வி அலுவலகம்,**
**புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.**

(33563)
(37-11-18-21)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 – 10 – 1943



உதிர்வு 30 – 05 – 2004

## செல்லத்துரை இராசேந்திரம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம்மையெல்லாம் இனிதே
வழிநடத்தி அன்பென்னும்
பாசத்தை அறிந்திடவே
எம்மை அரவணைத்து
இவ்வுலக வாழ்வை இழந்து
எவ்வுலகம் சென்றீரோ?

இன்று (29.06.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய மற்றும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்:
கட்டுவன் தெற்கு, **மனைவி, மக்கள், மருமக்கள்,**
தெல்லிப்பழை. (33498)(39-11-18-21) **பேரப்பிள்ளைகள்,**

## விபத்துச் செய்திகளைத் தொகுத்து பாராட்டுப் பெற்ற தரம் 4 மாணவி

தென்மராட்சி,ஜுன்29

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் நடைபெற்ற வீதி விபத்துக்கள் பற்றிய தினசரிகளின் செய்திகளை ஆக்கமாக தயாரித்து கண்காட்சியில் வைத்து பலரது கவனத்தையும் ஈர்க்கவைத்தார் நான்காம் தர மாணவியொருவர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றதாக பிரசுரிக்கப்பட்டிருந்த 32 வீதி விபத்துக்கள் பற்றிய தினசரி துண்டங்களை இந்தமாணவி தமது ஆக்கத்தில் சமர்ப்பித்திருந்தார்.

கண்காட்சியைப் பார்வையிட்ட பலர் வீதி விபத்துப் பற்றி மாணவியின் விழிப்புணர்வைப் பாராட்டினர்.

ஆக்கத்தில் வைக்கப்பட்டிருந்த 32 செய்தித் துண்டுகளில் 27 'உதயன்' பத்திரிகையில் பிரசுரமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-117)

## கல்விக் கண்காட்சி

வடமராட்சிகிழக்கு,ஜுன்29

மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் கல்விக் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 9மணிமுதல் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ம.நவநீதமணி தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ-182)

## தேவை

**சுன்னாகத்தில் இயங்கும் கணனி நிறுவனம் ஒன்றுக்குப் பெண் வரவேற்பாளர் தேவை. கணனி அறிவும், ஆங்கில அறிவும் கருத்தில் கொள்ளப்படும்.**

**விண்ணப்பதாரிகள்** Bio - Data **இனை 07.07.2004இற்குமுன் கிடைக்கக் கூடியதாகக் கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.**

**தொடர்பு: ச.கௌசிகன்**
**நீதிமன்ற வீதி,**
(11-21-18) **மல்லாகம்.** (33570)

## முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி

வலி.தெற்கு, ஜுன்29

உடுவில் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சியொன்று உடுவில் கிழக்கு தொம்பை வீதியிலுள்ள பாலர் பாடசாலை மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-152)

## NATIONAL YOUTH CHESS CHAMPIONSHIP TOURNAMENT

(இருபது வயதுக்குட்பட்டோர் - OPEN)

யாழ்.சதுரங்க சம்மேளனத்தினால் நடத்தப்படும் மேற்படி போட்டிக்கான மாவட்டமட்டத் தெரிவுப்போட்டி 03.07.2004 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியிலிருந்தே 12, 14, 16, 18, 20 வயதுக்குட்பட்டோர் தெரிவும் இடம்பெறும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 02.07.2004**

தொடர்புகொள்ளும் முகவரி:
செயலாளர்,
5,வைமன் வீதி, நல்லூர். (33517) (37-21-11-18)

திரு.சி.வித்தியாதரன்
(செயலாளர்).

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

*மண்ணில்* 18 – 12 – 1912



*விண்ணில்* 30 – 05 – 2004

அமரர்

## வல்லிபுரம் சின்னத்துரை

நாள்கள் முப்பத்தொன்று நகர்ந்தாலும் உங்கள் நினைவு எமது நெஞ்சத்திலிருந்து நீங்கவில்லை.

எங்கள் அனைவரையும் வித்தகராக்கிய உத்தமராகிய உங்களைத் தெய்வத்துள் தெய்வமாக வைத்து வணங்குகிறோம்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து, வள்ளலார் என்ற பெருமையைப் பேணிய உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29-06-2004) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு "மதுராந்தகம்" இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால்வாடும்:
**குடும்பத்தினர்.**

*"மதுராந்தகம்",*
*அல்லாரை,*
*மீசாலை.* (33580)(42-21-11-18)

தகவல்: திரு.சி.துரைராசா,
ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்.

# VISUAL TECH

Station Road, Chunnakam.
T.P.:0777 187943, 0777 038645

## புதிய வகுப்புகள் ஆரம்பம்:

எமது கணனிக் கல்வி நிலையத்தில் பின்வரும் கணனிக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இவற்றிற்கு முதல் 50 மாணவர்களுக்கு 50% புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளது.

**29-06-2004 - 29-07-2004 இற்குள்**
அனுமதிபெறும் மாணவர்களுக்கு
அனுமதி இலவசம்.

| Diploma Courses | Duration | Fees |
|---|---|---|
| ⋆ Diploma in Software Engineering | 4 Months | 3000 |
| ⋆ Diploma in Hardware Engineering | 3 Months | 2000 |
| ⋆ Diploma in Desktop Publishing | 3 Months | 2500 |
| ⋆ Diploma in Network Engineering | 3 Months | 3500 |
| ⋆ Diploma in MS Office | 3 Months | 2500 |
| ⋆ Diploma in Multimedia | 3 Months | 2500 |
| **Programming Courses** | **Duration** | **Fees** |
| ⋆ Visual Basic | 3 Months | 3000 |
| ⋆ Java | 3 Months | 3000 |
| ⋆ C++ | 3 Months | 3000 |
| **Certificate Courses** | **Duration** | **Fees** |
| ⋆ Page Maker | 1 Month | 1000 |
| ⋆ CorelDRAW | 1 Month | 1000 |
| ⋆ MS Word | 1 Month | 1000 |
| ⋆ MS Excel | 1 Month | 1000 |
| ⋆ MS Access | 1 Month | 1000 |
| ⋆ MS Powerpoint | 1 Month | 1000 |
| ⋆ HTML | 1 Month | 1000 |
| ⋆ FLASH | 1 Month | 1000 |
| ⋆ Photoshop | 1 Month | 1000 |
| ⋆ Dreamweawer | 1 Month | 1000 |

(33569)(34)

# PRINCE

துருபிடிக்காத
உலோக கிச்சன் சின்க்

## பிரின்ஸ்
## நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.



Access Graphics

ஏக விநியோகஸ்தர்கள்:
**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**
காட்சியறை: 524. ஸ்ரீசங்கராஜ மாவத்தை. கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5. 2337283-5. 2436779 பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# செக். குடியரசு வீரர் மெலன்பாரோஸ் 5 கோல்கள் அடித்து முதலிடத்தில்

லிஸ்பென்,ஜுன்29

போர்த்துக்கலில் நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துச் சுற்றுப்போட்டியில் இதுவரை நடைபெற்று முடிந்த போட்டிகளில் 5கோல்கள் அடித்ததன் மூலம் செக். குடியரசு அணியின் வீரர் மெலன் பாரோஸ் முதலிடத்தில் உள்ளார்.

தனது அதிரடியான ஆட்டத்தின் மூலம் அணியை அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெறச் செய்த இவர் அரையிறுதிப் போட்டியில் விளையாடமாட்டார்.

இறுதியாட்டத்தில் இவரின் பாரிய பங்களிப்பு அணிக்குத் தேவையாக இருப்பதைக் கருத்திற்கொண்டு அந்த



அணியின் பயிற்சியாளர் கரெல் புறுக்னர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

இவருக்குப் பதிலாக இன்னொரு அதிரடி ஆட்டக்காரரான மரிக்கெய்ஸ் கிறீஸ் அணியுடன் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் விளையாடவுள்ளார். (ப-10)

# ஊடகங்களுக்குப் பேட்டியளிக்க பாக்.கிரிக்கெட் வீரர்களுக்குத் தடை

ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்க கப்டன் இன்சமாம் உல் ஹக் உட்பட அனைத்து வீரர்களுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. ஆசிய கிண்ணக்கிரிக்கெட் தொடர் இலங்கையில் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றது.

இந்தத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உட்பட ஆறு அணிகள் பங்கேற்கின்றன. இந்தத் தொடருக்கான 25 வீரர்கள் கொண்ட பாகிஸ்தான் உத்தேச அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்த உத்தேச அணி வீரர்களுக்கு லாகூரில் விரைவில் உடல் தகுதி முகாம் நடக்க உள்ளது. இந்நிலையில், கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாரியார்கான் கூறுகையில், உடற்தகுதி முகாமில் இன்சமாம், அக்தர் உட்பட எந்த பாகிஸ்தான் வீரர்களும் ஊடகங்களுடன் பேசவோ, பேட்டியளிக்கவோ கூடாது. தேவையில்லாத பிரச்சினைகளை தடுப்பதற்காகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள உடனான வீரர்களின் தொடர்புகள் இனிப் புதிய பயிற்சியாளர் பொப் வூல்மரின் பொறுப்பில் விடப்படும் எனவும் ஷாலியார் கான் தெரிவித்துள்ளார். (10)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜுன்29

அமரர் இரத்தினசாமி ஞாபகார்த்த சுழல் கேடயத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பொமர்ஸ் வி.க.எதிர் பாரதி வி.க. மோதவுள்ளன. (10-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்29

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவு மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

றோயல் வி.க. எதிர் கலைவாணி வி.க., சென் அந்தனீஸ். வி.க. எதிர் பாடுமீன் வி.க. (10.ரி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுன்29

யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் அணித்தலைவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 2ஆம் திகதி மாலை 4மணிக்குக் கோபபாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் எஸ். மனோகரன் கேட்டுள்ளார். (10-190)

# ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளையும், மறுதினமும்

லிஸ்பென்,ஜுன்29

கடந்த இரண்டு வாரகாலமாக நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கோப்பைக் காற்பந்தாட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. நடப்புச் சம்பியன் பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி, ஜேர்மனி ஆகிய அணிகள் மண் கவ்வி வெளியேறிவிட்டன.

இந்நிலையில், நாளை புதன்கிழமை நள்ளிரவு 12.40 மணிக்கு தொடங்கும் முதல் அரையிறுதி ஆட்டத்தில் ஹொலண்டுடன் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் மோதுகிறது.

அரையிறுதி முன்னேறிப்புதிய வரலாறு படைத்துள்ள கிறீஸுடன் செக். குடியரசு அணி மற்றுமொரு ஆட்டத்தில் மோதுகிறது.

இந்த ஆட்டம் வியாழக்கிழமை நள்ளிரவு 12.40மணிக்குத் தொடங்கும்.

சுவீடனுக்கும் ஹொலண்டுக்கும் இடையே காலிறுதி ஆட்டம் ரசிகர்களுக்கு விருந்து அளித்திருந்தாலும் ஆட்டநேரத்திலும் மற்றும் மேலதிக நேரத்திலும் இரு அணியினராலும் கோல் போடமுடியவில்லை.

இதையடுத்து நடைபெற்ற பெனால்டி வாய்ப்பில் ஹொலண்ட் 5-4 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

வெற்றிக்கான 5ஆவது கோலை ஆர்ஜென் ராப்பென் அடித்தார்.

இதற்கு முன்னர் 3 ஐரோப்பியக் கிண்ணப் போட்டிகளிலும் பெனால்டி வாய்ப்பில் தோல்வியுற்று வெளியேறிய ஹொலண்ட் இம்முறை அதற்கு இடம்கொடுக்கவில்லை. பெனால்டி வாய்ப்பை வெல்லவேண்டும் என்று ஹொலண்ட் அணியின் கனவு இந்த வெற்றி மூலம் நிறைவேறியுள்ளது.(10)





# விளையாட்டு

## விம்பிள்டன் டென்னிஸ் நான்காவது சுற்றில் பெடரர்

விம்பிள்டன் டென்னிஸ் தொடரில சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் அபாரமாக ஆடி நான்காவது சுற்றுக்கு தெரிவாகியுள்ளார். பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் ஜெனிபர் கேப்ரியாட்டி நான்காவது சுற்றுக்குத்தகுதி பெற்றா.

ஆண்கள் பிரிவில் நடப்பு சம்பியனான ரோஜர் பெடரர், சுவீடனின் தோமஸ் ஜோன்சனை சந்தித்தார். இதில் பெடரர் 6-3, 6-4, 6-3, என்ற நேர் செட்களில் தோமஸை வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் ஜெனிபர் கேப்ரியாட்டி, பிரான்ஸின் நதலி டிகேயை எதிர்த்து விளையாடினார். இதில் கேப்ரியாட்டி 7-5, 6-1, என்ற செட்களில் டிகேயை வென்று, நான்காவது சுற்றுக்குத்தகுதி பெற்றார். மற்றொரு போட்டியில் குரோஷியாவின் கரோலினாவுக்கும் அமெரிக்காவின் மேகன் சவுக்னெசியாவுக்கும் இடையே நடந்த போட்டியில் 7-6, 7-6 என்ற நேர் செட்களில் மேகனை வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். கரோலினா, இரண்டாவது சுற்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சை வென்றது குறிப்பிடத்தக்கது. (10)

# முத்தரப்புத் தொடரின் மூன்றாவது போட்டியில் மே.இந்திய அணி வெற்றி

## கப்டன் லாராவின் சிறப்பான ஆட்டம்

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வெற்றியீட்டியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. மேற்கிந்திய பந்துவீச்சாளர்களின் சிறப்பான பந்துவீச்சினால் இங்கிலாந்து வீரர்கள் விரைவில் சுருண்டனர். பிராட்ஷா வீசிய ஆட்டத்தின் முதல் ஓவரில் டிரஸ்கோதிக்கும், அடுத்த ஓவரில் மைக்கேல் வோனும் ஆட்டமிழந்தனர். அடுத்து ஜோடி சேர்ந்த ஜோன்ஸ், ஸ்ட்ராஸ் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்கு 82 ஓட்டங்களைச் சேர்தத நிலையில் ஜோன்ஸ் ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 38.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்கள் எடுத்தது. சிறப்பாக ஆடிய ஸ்ட்ராஸ் 43 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கிந்தியத் தரப்பில் பிராவோ 3 விக் கெட்டுக்களையும் லாசன் ரம்போல், பிராட்ஷா ஆகியோர் தலா 2விக்கெட் டுக்களையும் கைப்பற்றினர். 148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் மேற்கிந்திய அணிகளமிறங்கியது.

முதல் விக்கெட்டுக்கு 62 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் சந்தர்போல் அண்டர்சனின் பந்தில் ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து ஸ்மித் சாவான் ஆகியோர் ஆட்டமிழக்க 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 93 ஓட்டங்கள் எடுத்திருந்தது மேற்கிந்திய அணி.

அடுத்து வந்த கப்டன் லாரா பவுண்டரியுடன் ஆட்டத்தைத் துவக்கினார். மறுமுனையில் சிறப்பாக ஆடிவந்த கெய்ல் அரைச்சதத்தைக் கடந்தார், இந்த ஜோடி கடைசிவரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றி அடையச் செய்தனர். அந்த அணி 32.2 ஓவர்களில் 3விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் எடுத்து 7விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது. (10)

# ஆசிய மெய்வன்மைப் போட்டியில் சுசந்திகா தங்கப்பதக்கம் வென்றார்

கொழும்பு,ஜுன்29

கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் 'கோன்பிரி' ஆசிய மெய்வன்மைப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுசந்திகா ஜயசிங்க தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இவர் 23.3 செக்கனில் ஓடி முதலிடத்தைப்பெற்றார். ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பிரதீப்குமார முதலிடத்தையும் உயரம் பாய்தல் போட்டியில் மஞ்சுள சமன்குமார முதலிடத்தையும் பெற்றுள்ளனர். இவர் தனது முன்னைய சாதனையை முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தினார். (10)

## மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்

ஆம்ஸர்டாம்,ஜுன்29

ஹொலண்டில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆம்ஸர்டாம் தமிழர் விளையாட்டுக்கழகம் முதலிடத்தையும் ஹோர்ன் சிட்டு விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் டென்கெல்டா தமிழர் உதைபந்தாட்டக் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

## கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

வடமராட்சிகிழக்கு,ஜுன்29

கரும்புலிகள் தினத்தையொட்டி வடமராட்சி கிழக்கில் கடலிலும், தரையிலும் மாபெரும் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கடலில் நீச்சல் போட்டி, படகு ஓட்டப் போட்டி உட்படப் பல போட்டிகளும் தரையில் மரதனோட்டப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, தலையணைச் சண்டை உட்படப் பல போட்டிகளும் நடைபெறவுள்ளன.

ஜுலை 5 இறுதி நாள் நிகழ்வுகள் மருதங்கேணியில் நடைபெறவுள்ளன. (எ-182)

## விளையாட்டு விழா

செம்பியன்பற்று,ஜுன்29

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (10-36-182)





ஹொலண்டில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்போது தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படுவதை முதற்படத்திலும் வெற்றிக்கிண்ணத்துடன் நிற்கும் வீரர்களை அடுத்த படத்திலும் காணலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள லான்சர் கார் (12 ஸ்ரீ XXXX தொடர் இலக்க முடையது) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: பெ.சுரேஸ், 70/2, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். T.P 0777 183474. (33573)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சுகளும் நாளை 30.06.04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி. T.P 3529, 2867. P. ரவி தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. (33581)

## வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் ஒரு பிள்ளையுடன் கூடிய மூவர் கொண்ட குடும்பத்திற்கு நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விள. இல.: 2317 மே/பா. உதயன். (33555)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, டச்சு வீதி, மருதடிச சந்தியில் வீடு கட்டுவதற்கு உகந்த தென்னை வளம் உள்ள 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.சி.கமலநாதன், கந்தசாமி கோயில் வீதி, சங்கத்தானை. T.P. 0777 676593. (33584)

யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல. 2312, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (சி-35846)

## தவறிவிட்டது

சந்திரசிங்கம் சுசீலாதேவி என்பவரது தே.அ.அ. (545364301V), கனடா பிரஜாவுரிமை அட்டை மற்றும முக்கிய ஆவணங்கள் அடங்கிய 'போ்ஸ்' 25-06-04 அன்று யாழ்ப்பாணத்துக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் புன்னாலைக்கட்டுன் நோக்கிச் செல்லும் மினி பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 193, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.4590231(33532)

# விவசாய உற்பத்தி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாியானமுறையில் தேர்வுசெய்யப்பட பயனாளிகளுக்கு இவற்றைச் சென்றடைய வைப்பதில் விவசாய சம்மேளனங்கள் வெகு கவனமாக இருக்கக வேண்டும். வழங்கப்படும் உதவு தொகைகள், உள்ளீடுகள் என்பனவற்றின் பின் விளைவுகள் அவதானிக்கப்பட்டு, அவை உரிய பலனைத் தோற்றுவிக்கின்றனவா என்பதை இவை உறுதிசெய்துகொள்ளவேண்டும்.

உதவி வழங்கும் நிறுவனங்கள் தாம் வழங்கும் உதவிப் பொதிகள் தான் விவசாயிகளின் தேவையெனக் கருதுகின்றன. ஆனால், விவசாயிகளின உண்மையான தேவை எதுவோ அவற்றை வழங்குவதுதான் பயனுள்ளது. எனவே, விவசாயிகளின் தேவைகள், புள்ளி விவரங்கள், தகவல்கள், உதவி வழங்கும் முறைகள் என்பவறறைச் சம்மேளனங்களே முனனின்று தெரிவிக்கவேண்டும்.

எமது பிரதேசத்தில் உள்ள வர்த்தக ரீதியிலான விவசாயிகள் (Commercial Farmers) சராசரி நிலை விவசாயிகள் (Average Farmers) அடிமட்ட விவசாயிகள் (Subsistance Farmers), என்போருக்குரிய பிரசசினைகள், தேவைகள் போன்றவற்றை சம்மேளனங்களே இனங்காணவேண்டும்.

வர்த்தகரீதியிலான விவசாயிகளை மேலும் முன்னேற்றமடையச் செய்வதிலும், சராசரி நிலை விவசாயிகளை வர்த்தக ரீதியிலான விவசாயிகள் தரத்திற்கு கொண்டு வருவதிலும், அடிமட்ட விவசாயிகள் தமது குடும்பத்துக்கான தன்னிறைவோடு நின்றுவிடாது உற்பத்திகளை மேலதிகமாகச்செய்து சந்தைப்படுத்தித் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய நிலைக்குக் கொண்டு வருவதிலும் சம்மேளனங்கள் அக்கறைகொண்டு செயற்படவேண்டும். இவர்களின் பிரச்சினைகளை பொதுமைப்பாடான பிரச்சினைகளாக இனங்காணாது, ஒவ்வொரு விவசாயிகளின் பிரச்சினைகளையும் தனித் தனியாக இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வுகாண முயற்சிக்கவேண்டும்.

இவ்வாறு செயற்படும்போது விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்கள், கடன்திட்டங்கள், வேறு அபிவிருத்தி திட்டங்கள் என்பவற்றை உதவிவழங்கும் நிறுவனங்கள் சுலபமாக மேற்கொள்ளமுடியும். விவசாயிகளின் உற்பத்தி தொடக்கம் அவற்றைச் சந்தைப்படுத்தல், அதன் பின் விளைவுகள், பிரச்சினைகள் போன்றவற்றில் சம்மேளனங்கள் தமது முழுமையான பங்களிப்பைச் செய்யவேண்டும்.

தம்மை ஒரு வலுவுள்ள நிறுவனமாக அமைத்துக்கொள்ளவேண்டும். ஸ்திரமான நிலையில் நின்று கொண்டு விவசாயத் திணைககளம், கமநலசேவைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடைத் திணைக்களம் போன்ற விவசாயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி விவசாயிகளின் பிரச்சினைகள், தேவைகளை முன்வைத்து அவற்றுக்குத் தீர்வுகாணவேண்டும்.

பிரச்சினைகளைப் பொதுமைப்பாடாக அன்றித், தனித்தனிக் குழுமங்களுக்கேற்ப இனங்கண்டு தற்போதைய உலக ஒழுங்கிற்கேற்ப தொழில்நுட்ப ஆலோசனைகளையும் தகவல்களையும் தெரிவிப்பதில் திணைக்களங்களுக்கும் விவசாயிகளுக்கும் மத்தியில் ஒரு தொடர்புப் பாலமாக விவசாய சம்மேளனங்கள் செயற்பட்டால் எமது விவசாய அபிவிருத்தியில் நாம் எதிர்பார்க்கும் இலக்குகளை சுலபமாக அடையமுடியும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 - 02 - 1949

மறைவு
29 - 06 - 2003

அமரர் **சின்னப்பொடி கதிரவேலு**

எங்கள் அன்புத் தெய்வமே!
நாங்கள் உங்களைப் பிரிவோமென்று
கனவு கூடக் கண்டதில்லை
எம்மை அன்போடும் பாசத்தோடும்
வளர்த்த உங்கள் நேசம் நிறைந்த
நினைவுகள் ஒன்றல்ல ஆண்டுகள்
பல சென்றாலும் எம் மனவுலகில்
நீங்காது நிலைத்தேயிருக்கும்!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி.

(33589)(42)

## பல்லாண்டு! பல்லாண்டு! வாழ்க! என வாழ்த்துகின்றோம்



திருமண வாழ்வின் இருபதாவது
ஆண்டு நிறைவு
தாளையடியைச் சேர்ந்த
**திரு.திருமதி பிரான்சீஸ் - வனஜா**
தம்பதிகள் இன்று (29-06-2004) செவ்வாய்க்கிழமை தமது திருமண இல்லற வாழ்வின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி மகிழ்ந்து இன்புறுகின்றார்கள்.

இவர்கள் இறைவனின் அருள்பெற்று சகல சௌபாக்கியங்களும் பெற்று நலமோடும், மகிழ்வோடும் பல்லாண்டு காலம் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகளான: பிரான்ஸினி,
பிரசாத்,
பிரமிலா.

தாளையடி.

(33585)(42)

## யாழ்ப்பாணத்திற்கு அதிக லைன்கள்

எங்கள் விரிவாக்க நடவடிக்கைகளின் பயனாக இப்பொழுது மானிப்பாயில் மேலும் அதிக லைன்களைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதிகமான தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளதால் உங்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கக்கூடியதாக எமது ஆற்றல் வளங்கள் அதிகரித்துள்ளன. எனவே, தாமதிக்காதீர்கள். இன்றே சண்டெல்லுடன் இணைந்து அதிநவீன தொலைத்தொடர்புச் சேவையின் நன்மையைப் பெறுங்கள்.

**7 தினங்களுக்குள் இணைப்பு**

**ஐ.டி.டி. சகிதம் சண்டெல் தொலைபேசி**

**ரூ. 24,900/=**

Suntel
*Your telecom partner for life*

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:
இல.31, பிள்ளையார் இன் கட்டடம்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 4590000-1 :.பெக்ஸ்: 4590003

Q&E Advertising

# இடைக்கால அரசை நேற்று ஈராக்கிடம் திடீரெனக் கையளித்தது அமெரிக்கா

## ஆடம்பரமற்ற முறையில் நடைபெற்ற கைமாற்றம்

பக்தாத்,ஜூன்29

**ஈராக்கின் ஆட்சி அதிகாரத்தை கையளிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த திகதிக்கு இரு நாள்களுக்கு முன்பாகவே அமெரிக்கா நேற்று ஈராக்கியரிடம் அதிகாரத்தை முறையாகக் கையளித்தது.**

பக்தாத்தில் இடம்பெற்ற ஆடம்பரமற்ற ஒரு வைபவத்தில் அமெரிக்க நிர்வாகி போல் பிறீமர் இடைக்கால அரசியல் சட்டபூர்வமான ஆவணங்களை ஈராக்கிய சிரேஷ்ட நீதிபதியொருவரிடம் கையளித்தார். அதன் பின்னர் பிறமர் விமான மூலம் தமது நாட்டுக்குப் புறப்பட்டுச்சென்றார்.

பலத்த பாதுகாப்புக்கு உட்பட்டிருந்த பச்சை வலயம் என்றழைக்கப்படும் பகுதியில் நிகழ்ந்த இந்த வைபவத்தில் ஈராக்கின் இடைக்கால பிரதமர் இயட் அல்லவியும் கலந்துகொண்டார். 'இது ஒரு வரலாற்று முக்கியத்துவமான நாள்' என்று அவர் கூறினார்.

ஆனால், இந்தச் சம்பவம் சாதாரண ஈராக்கியர் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் செய்தி முகவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

அதிகாரம் கையளிக்கும் வைபவத்தில் பிறமர் பேசுகையில், கூட்டுப படைகளின் முன்னாள் நிர்வாகி என்று தன்னை வர்ணித்துக்கொண்டார்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் ஈராக்கிற்கு அதனை விடுவிப்பதற்காகவே வந்தன. சதாம் ஹுசைனால் விட்டுச்செல்லப்பட்டுள்ள பெருமளவிலான புதைகுழிகளை காண்பவர்கள் எவரும் இதனை ஒப்புக்கொள்வார்கள் என்று பிறீமர் மேலும் கூறினார்.

எதிர்காலத்தில் மிகுந்த நம்பிக்கையுடன் நான் ஈராக்கைவிட்டுச் செல்கின்றேன். எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கு புதிய அரசுக்குத் திறமையுண்டு என நான் நம்புகிறேன் என்று அவர் சொன்னார்.

இது ஒரு வரலாற்று முக்கிய நாள; மகிழ்ச்சியான நாள்; ஈராக்கியர்கள் அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நாள் என்று பிரதமர் இயட் அல்லவி கூறினார்.

2005 ஆம் ஆண்டு தேர்தல்களை நடத்துவதற்கு ஈராக்கிய அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நிர்வாகக் கையளிப்பை முன் கூட்டியே நடத்துவதற்கான அதிர்ச்சி அறிவிப்பை முதலில் வெளியிட்டவர் அமைச்சர் ஹொஸ்யர் செபாரிதான். இஸ்தான்புல்லில் இடம்பெற்ற நேட்டோ மாநாட்டின் போது பிரிட்டிஷ் பிரதமருடன் பேசியதன் பின்னர் இந்த அறிவித்தலை அவர் வெளியிட்டார். (ப-8)



இடைக்கால நிர்வாகத்தின் சட்டபூர்வமான ஆவணத்தை அமெரிக்க நிர்வாகி போல் பிறீமரிடமிருந்து (வலது) சிரேஸ்ட நீதிபதி மிடாட் முஹமட் (இடது) பெற்றுக்கொள்கின்றார். நடுவில் ஈராக்கின் பிரதமர் இயட் அல்லவியும் படத்தில் காணப்படுகின்றார்.

## ஈராக்கிற்கு மேலும் படைகள்? கனடாவில் எதிர்ப்பு வலுக்கிறது

சுர்ரி,ஜூன்29

ஈராக்கிற்கு மேலும் தனது படைகளை கனடா அனுப்பக்கூடாது என்று கனடாவின் முக்கிய அரசியல் கட்சியான கன் சர்வேடிட் கட்சி தெரிவித்துள்ளது. அக்கட்சியின் தலைவர் ஸ்டீபன் ஹார்பர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் ஹார்பர் மேலும் தெரிவித்ததாவது:-

கனடா மிகச் சிறிய இராணுவப் படைகளையே கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தான் உட்பட பல நாடுகளில், எங்கள் நாட்டு இராணுவம் போதுமான அளவிற்கு பணியாற்றிவிட்டது. ஈராக்கில் ஏற்கனவே கனடா இராணுவத்தின் ஒரு பகுதியினர் தங்கிப்பணியாற்றிவருகின்றனர்.

இந்நிலையில், அங்கு மேலும் கூடுதல் இராணுவத்தை அனுப்புவதில் அர்த்தமில்லை. கடந்த வருடம் அமெரிக்கக் கூட்டணிப்படையினர் ஈராக்கிற்குச் சென்றபோது, நான் அதை ஆதரித்தேன்.

நான் இப்படிச் சொல்வது சற்று முரண்பாடாகவிருக்கலாம். ஆனால் கனடா மக்களின் உணர்வுகளை மதித்தே ஆகவேண்டும் - என்றார்.

தமது நாட்டின் பாகாப்புப் படையினருக்குப் பயிற்சியளிக்குமாறு ஈராக்கில் அமையவுள்ள இடைக்கால அரசு நேட்டோ அமைப்பிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஹார்பர் இதனைத் தெரிவித்துள்ளார். நேட்டோவில் கனடாவும் ஒரு அங்கத்துவ நாடாகும்.

கடந்த வருடம் ஈராக் மீது அமெரிக்கக் கூட்டணிப்படையினர் போர் தொடுத்தபோது ஆதரவு தெரிவித்த கனடா நாட்டின் முக்கிய கட்சித்தலைவர் ஒருவரே, இப்போது படைகளை அனுப்புவதற்கு மாறாக குரல்கொடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 300 மீற்றர் சுரங்கப்பாதை தோண்டி சென்று இஸ்ரேல் நிலைகள் மீது பலஸ்தீனர் தாக்கு!

காஸா,ஜூன்29

இஸ்ரேலிய எல்லைப்பாதுகாப்பு நிலைகள் மீது பலஸ்தீனப் போராளிகள் சுரங்கம் அமைத்து அதனூடாகச் சென்று தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் ஆறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

இஸ்ரேலிய குடியேற்றங்களுக்கருகிலுள்ள கஸ்கதிச் சந்தியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

350 மீற்றர் தூரமுடைய சுரங்க வழிப்பாதை ஊடாகவே இத்தாக்குதலை பலஸ்தீனப் போராளிகள் மேற்கொண்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தானநிலையில் உள்ளார் என இஸ்ரேலிய வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவர் பாதுகாப்பு நிலைய இடிபாடுகளுக்குள் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாகச் சிக்கிக்கிடந்திருக்கிறார்.

இத்தாக்குதலுக்குப் பதிலடி கொடுககும் வகையில் காஸா நகரின் ஸயிட்டன் பகுதியில் உள்ள இரு பலஸ்தீன உலோகத் தொழிற்சாலைகள் மீது இஸ்ரேல் ஏவுகணைத்தாக்குதல் நடத்தியது.

எனினும், இதில் எதுவித உயிர் இழப்புக்களோ, சேதங்களோ ஏற்படவில்லை. இதனைத் தொடர்ந்து பலஸ்தீன கம்யூனிஸ் அகதி முகாமில் இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாகினர். இவர்களில் ஒருவர் பலஸ்தீன பொலீஸ் அதிகாரி ஆவார.

இந்த அகதி முகாமில் இருந்த பலஸ்தீன தீவிரவாதிகளிடமிருந்து பலத்த துப்பாக்கிச் சூடு வந்ததாலேயே தாம் பதிலுக்குச் சுட்டதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர்.

தாக்குதல் பற்றிய ஆரம்பத் தகவல்களின்படி 30 இஸ்ரேலிய இராணுவத்தினர் காயமடைந்தார்கள் எனறு தெரிவிக்கப்பட்டது. இதனை அறிந்து நூற்றுக்கணக்கான பலஸ்தினர்கள் காஸா நகர் வீதிகளில் இறங்கிக் கொண்டாடினர்.

கடந்த சனிக்கிழமை அல்-அக்ஸா தியாகிகள் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான நாயெப் அபு சாரெக உட்பட எட்டுப்பேர் இஸ்ரேலிய இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

இக்கொலைச் சம்பவத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே சுரங்கத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக ஹமாஸ், அல்-அக்ஸா அமைப்புக்கள் தனித்தனியே உரிமை கோரியுள்ளன.

இத்தாக்குதலில் தமக்கு பெரிய பாதிப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை என்று இஸ்ரேலிய இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (8)

## முஷாரப்பின் அழுத்தம் காரணமாகவே பாக். பிரதமர் இராஜினாமாச் செய்தார்

### புதிய தகவல்கள் இப்போது வெளியாகின்றன

பாகிஸ்தான் பிரதமர் பதவியிலிருந்து ஜபருல்லாகான் ஜமாலி இராஜினாமச் செய்வதற்கு இராணுவ நிர்ப்பந்தமே காரணம் என்று அந்நாட்டு எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஜாமாலியின் இராஜினாமாவால் நாட்டில் அரசமைப்புச் சட்ட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அக்கட்சிகள் குறிப்பிட்டுள்ளன.

அதிபர் முஷாரப்பின் நெருக்குதல் காரணமாகவே ஜமாலி பதவியைத் துறக்கநேரிட்டது. நாட்டில் ஜனநாகத்துக்கு எதிராக சதி நடந்துள்ளது. தேசப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று முட்டாஹிடா மஜ்லிஸ் - இ அமல் (எம்.எம்.ஏ.) எனும் இஸ்லாமியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டில் ஒருவரிடமே அதிகாரம் இருக்கவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதையே ஜமாலியின் பதவித்துறப்பு காட்டுகின்றது - இவ்வாறு எம்.எம்.ஏயின் தற்காலிகத் தலைவர் தாஜி ஹுசைன் தெரிவித்தார். உலகில் எந்த நாட்டிலும் பதவி விலகும் பிரதமர் தமக்குப் பின் இவர் தான் பிரதமர் எனக் கூறமாட்டார். ஆனால், இங்கு அப்படி நடந்துள்ளது. அதைப் பார்க்கும் போது யாரோ பின்னணியிலிருந்து காயை நகர்த்துகிறார் என்றுதான் தெரிகிறது என ஹுசைன் மேலும் தெரிவித்தார்.

மக்கள் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அமின் பாஹிம் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் -

ஜமாலியின் இராஜினாமாவால் நாட்டில் அரசமைப்பு சட்ட நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. சர்வாதிகார அமைப்பு, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த அரசையும் இரு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்க விடுவதில்லை - என்றார்.

கடந்த ஆண்டு முஷாரப் ஆதரவு

உலக அரங்கில்

பெற்ற - சர்ச்சைக்கிடமான - அரசமைப்புச் சட்ட சர்திருததம் நாடாளுமன்றத்தில் நிறைவேற உதவியது முட்டாஹிடா மஜ்லிஸ் - இ - அமல் (எம்.எம்.ஏ.) இந்தச் சட்டம் நிறைவேற உதவினால் இராணுவத்தலைமைத் தளபதி பதவியிலிருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் தாம் விலகிவிடுவேன் என முஷாரப் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், அவர் அப்படிச்செய்ய தயாரில்லை என்பதை இப்போது கோடிகாட்டிவருகிறார்.

இதேவேளை, பாகிஸ்தானில் இடைக்காலப் பிரதமர் சுஜாத் ஹுசைனை தேர்வுசெய்வதற்கான நாடாளுமன்ற சிறப்பு அமர்வு இன்று இடம் பெறுகின்றது.

ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (குவாமி) கட்சியின் தலைவர் சுஜாத் ஹுசைன், இடைக்காலப் பிரதமராக முன்னாள் பிரதமர் ஜமாலியால் சனிக்கிழமை அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைப் போன்று பொருளாதார வல்லுநர் ஒருவர் பாகிஸ்தானிலும் பிரதமராக இருக்க வேண்டும் என்று அந்நாட்டுத் தலைவர்கள் விரும்புகின்றனர். இதன்படி நிதியமைச்சர் சவுகத் அஸீஸ் பிரதமராக நியமிக்கப்படுவார். அதுவரை ஹுசைன் இடைக்காலப் பிரதமராக நீடிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்காலப் பிரதமராக பதவியேற்கவுள்ள ஹுசைன், நாடுகடத்தப்பட்ட முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆட்சிக்காலத்தில் உள்துறை அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## படகு கவிழ்ந்து 50 பேர் பலி; கோமதி நதியில் சோகநிகழ்வு

ஜான்பூர்,ஜூன்29

இந்தியா, கோமதி நதிக்கரையில நடைபெறும் திருவிழாவிற்கு பக்தர்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 50 பேர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தின் ஜான்பூர் மாவட்டத்தில் ஹரிஹர்புர் - பாரயதியா இடையேயுள்ள கோமதி ஆற்றிலேயே நேற்றுமுன்தினம் இந்தப் பரிதாபச் சம்பவம் நடந்தது.

இப்படகில் 70இற்கும் மேற்பட்டவர்கள் பயணம் செய்துள்ளனர். அதிலிருந்த 22 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இதுவரை 8 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏனையவர்களின் நிலைகுறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இப்படகில் 35 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். 70 பேருக்கும் அதிகமானவர்கள் இப்படகில் பயணம் செய்தமையினால் பாரம் தாங்காது நடு ஆற்றில் படகு கவிழ்ந்துள்ளது என்று பொலீஸ் விசாரணையின போது தெரியவந்துள்ளது.

இந்த விபத்துக்குக் காரணமான படகோட்டிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். படகு விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வழங்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. (8)



1950 ஆம் ஆண்டு கொரியப் போர் மூண்டதை நினைவுகூரும் வகையில் வடகொரியாவின் தலைநகரான பியாங்யாங்கில் நடைபெற்ற பேரணியில் அமெரிக்காவுக்கு எதிராக கோஷமிடும் கொரிய மக்கள்.

# ஒலிப்பேழை வெளியீடு

மூளாயூர் சாரதா பரஞ்சோதி அவர்களால் பாடப்பட்ட
மூளாய் வதிரன்புலோ
சித்திவிநாயகர் முத்துக்குமார சுவாமியின் பக்திப் பாடல்

**இடம்:** மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயம்
**காலம்:** நாளை (30.06.2004) புதன்கிழமை
**நேரம்:** பி.ப.4.00 மணி

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மூளாய். (33586)(34-18-19-42) - வெளியீட்டாளர்கள்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 05 - 1928



மறைவு 01 - 07 - 2001

கைதையூர்
## அமரர் இராமலிங்கம் வேலாயுதர்

(முன்னாள் கைதடி நாவற்குழி, கிராம சபைத் தலைவரும், ஓய்வுபெற்ற அதிபரும்)

அன்பினைச் சொரிந்து பாசத்தினைக் கொட்டி
எம்மை எல்லாம் அன்புடன் வழி நடத்தினீர்கள் - அப்பா
எம்மை விட்டுப்பிரிந்து மூன்றாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவில் வாழும் உங்கள் - அன்பு உள்ளங்கள்.

*'மலரகம்',*
*கைதடி மத்தி,*
*கைதடி.* (C/35893)(42-18-19)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை
வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள் 16.07.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் ஊர்காவற்றுறைப் பிரதேசசபை செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கின்றது.

01. கேள்விப் பத்திரங்களை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 'M9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களோ அல்லது பொதுஸ்தாபனங்களோ 14.07.2004 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கீழே [illegible] தொகையைச் செலுத்தி ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.

03. கேள்விப் பத்திரத்தின் ஒருபிரதியை கடிதஉறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வீதித் திருத்தத்திற்கான கேள்வியெனக் குறிப்பிட்டு அரக்கு முத்திரை வைத்து 'செயலாளர், ஊர்காவற்றுறைப் பிரதேசசபை, ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலமாக அனுப்பி அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு சேர்ப்பித்து இரண்டாவது பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்' அவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

04. கேள்விகள் 19.07.2004 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு உரிமையுண்டு.


06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேசசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற்வரி உட்பட) |
|---|---|---|---|
| 01. | அனலைதீவு வல்லியப்பர் கோயில் ஒழுங்கை திருத்தவேலை | ரூ.6000.00 | ரூ.575.00 |
| 02. | காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோயில் வீதி திருத்தவேலை | ரூ.5000.00 | ரூ.575.00 |

பிரதேசசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.
28.06.2004 (சி-35894)(34-18-19-42)

கு.கணேசலிங்கம்
செயலாளர், ஊர்காவற்றுறைப் பிரதேசசபை.

# 2வது ஆண்டு நினைவுப்பிரார்த்தனை



சின்ன வயது முதல் சீரிய சிந்தனையுடன் விவேகமாய் விளங்கியவர் விஜயவர்மன் அவர்கள் எதனையும் ஆராய்ந்து அறியவேண்டும் என்றபேரவா அவரிடம் இயல்பாகவே இருந்தது புதுமைகள் செய்து தன்புலமையை பலரும் அனுபவிக்க செய்த பெருமை அமரர் விஜியைச் சாரும். தொலைக்காட்சி ஒலிபரப்பினை தமிழ் மண்ணில் முதல் முதலில் அரங்கேற்றி நிலைநாட்டிய பெருமை அமரர் விஜி அவர்களை பல ஊரவரும் அறிய வைத்தது வீடியோகலையை தமிழ் சிறார்களுக்கு போதித்து குடாநாட்டில் வீடியோ நிறுவனத்தை ஆரம்பித்த பெருமையும் அவரையே சாரும் புதிய-புதிய கருவிகளை புதுமையோடு கண்டு பிடித்து பல்தொழில் வல்லுனர்க்கும் பயனுறச் செய்தவர் இவரே இவரது ஆற்றல் குறித்து கொழும்பில் வெளியிடப்படும் ஆங்கில தினசரிப்பத்திரிகை பிரசுரித்தமை பெருமைக்குரிய விடயம் ஆகும். அன்பு பண்பு ஆராய்ந்த சொல்வண்மை சிறந்த ஆளுமை திடீரென இவ்வுலகவாழ்வை நீர்த்தமை எம்மண்ணுக்கு பேரிழப்பாகும் அமரர் எம்மைவிட்டு பிரிந்து இரு ஆண்டுகள் நிறைவு பெற்றாலும் அவரை கலையுலகம் இன்றும் மறக்க இயலாது அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி வணங்குவோம்.

தாயின் மடியில் 07.03.1954
இறையடியில் 21.06.2002

## அமரர் மாணிக்கவாசகர் விஜயவர்மன்
(எக்ஸ்போ ~ நிறுவன அதிபர்) கோண்டாவில்

மனைவி, மகன்
(வி.ரேனுகா, வி.லருசன்)
எக்ஸ்போ நிறுவன பணியாளர்கள்.

**குறிப்பு:**
எமது நிறுவனத்திற்கும் வேறு எந்த தனிப்பட்ட நபர்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதனையும், எமது நிறுவனத்தின் பெயரை போலியாக பாவிப்பவர்களிடம் ஏமாற்றமடைய வேண்டாம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

EXPO Video Complex
PROFESSIONAL
VIDEO FILM MAKERS

CGC Graphics-Inuvil.

# பள்ளத்தில் பஸ் வீழ்ந்ததில் ஒருவர் பலி; 31பேர் காயம்!

## தமண அருகே நேற்றுக்காலை சம்பவம்

கொழும்பு,ஜூன்29

அம்பாறையில் பஸ் ஒன்று பள ளத்தில் வீழ்ந்ததால் அதில் பயணம் செய்த பயணி ஒருவர் அந்த இடத்தி லேயே பலியானார். மேலும் 31 பேர் படுகாயமுற்ற நிலையில் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இந்த விபத்து, நேற்று அதி காலை 4.50 மணிக்கு இடம்பெற்றது.

அம்பலாங்கொடையில் இருந்து அம்பாறை நோக்கிச் சென்ற பஸ் ஒன்று தமண, அக்கல்ஓயா என்ற இடத்தில் 'அலி பங்குவ' என்ற பாரிய வளைவைத் தாண்டும் சமயம் பாதையைவிட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்தது. சாரதியின் கவனயீனம் காரண மாகவே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது எனத் தமண பொலீஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கியவர்களில் 7 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என வும் தெரிவிக்கப்பட்டது. தமண பொலீ ஸார் இவ்விபத்துக்குறித்து தீவிர விசாரணை செய்துவருகின்றனர்.

## மூதாட்டியின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன்29

கிணற்றில் வீழ்ந்து இறந்தவர் என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் மாலை யாழ். போதனா வைத்திய சாலையில் பெரிய விளானைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்லாச்சி (வயது 70) என்ற வயோதிபப் பெண்ணின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

குளிக்கச்சென்ற அவரைக் காண வில்லை எனத் தேடிப்பார்த்தபோதே கிணற்றில் அவரது சடலம் காணப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## கலைப்பீடத்தின் அரையாண்டுப் பரீட்சை

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் 2ஆம் வருட மாண வர்களுக்கான முதலாவது அரை யாண்டுப் பரீட்சைகள் அடுத்தமாதம் 7 ஆம் திகதி முதல் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வந்த வேலை நிறுத்தம் காரணமாக இந்தப் பரீட்சை பிற்போடப்பட்டிருந்தது. (எ-3)

# இந்துக்கள் மதம் மாறுவதைத் தடுப்பது சிவாச்சாரியார்களின் பொறுப்பு ஆகும்

## பேராசிரியர் சண்முகதாஸ் கருத்து

யாழ்ப்பாணம்,ஜூன்27

சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் இடம்பெறும் மத மாற்றங் களைத் தடுக்க வேண்டிய பொறுப்பு சிவாச்சாரியார்களுக்குரியது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ்.

நல்லூர் நாவலர் மணிமண்டபத் தில் இடம்பெற்ற ஞான ஒளி நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மரபுகளைப் பேணிப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றிய நாவலர் பெருமானின் நினைவு மண் டபத்தில் இந்நூல் வெளியீட்டு விழா இடம்பெறுவது பாராட்டுக்குரியது.

இதேவேளை, இன்று எமது சமூ கத்தில் இந்து சமய வாழ்வியலைக் கடைப்பிடிக்கும் பண்பு குறைந்து காணப்படுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் தொன்மையான இந்துமத மரபுகள் பேணப்பட வேண் டும்.

இன்று சைவசமயத்தைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பெரும் குறை யாகக் காணப்படுவது மதம் மாறும் செயற்பாடுகள் ஆகும்.

சைவசமய மக்கள் மதம் மாறும் செயற்பாடுகளைத் தடுக்க வேண்டிய தும் மத மாற்றத்துக்கான எதிர்ப்புக் களைத் தெரிவிக்கவேண்டிய பொறுப் பும் சிவாச்சாரியார்களுக்குரியது. அத்துடன், சைவசமய சிவாச்சாரியார் களுக்கு ஆலயங்களில் மதிப்புக் கொடுக்கும் பண்பு குறைந்து காணப் படுகின்றது. ஆலயங்களில் உள்ள தர்மகர்த்தா சபைகளில் குளறு படிகளும், அதிகாரப் போட்டிகளும் இதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

எதிர்காலத்தில் சைவசமய வளர்ச்சிக்கு சைவ மரபுகளைப் பேணும் பணியில் சிவாச்சாரியார்கள் வழிகாட்டவேண்டும் - என்றார்.

தலைமையுரையாற்றிய பேரா சிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தனதுரையில் குறிப்பிட்டதாவது:-

இந்துமதம் தொன்மையானது. அந்தவகையில், ஆசிய நாடுகளில் மட்டுமன்றி மேற்குலக நாடுகளிலும் இந்துமதம் செல்வாக்குப் பெற்று விளங்கு கிறது.

இந்துமதம் மேற்குலகில் செல் வாக்குப் பெற்றுத் திகழ்வதற்கு ஆசிய நாடுகளில் இந்து மதத்தைப் பின்பற்றியவர்கள் மேற்குலகுக்கு புலம்பெயர்ந்தமையும் தொழில் தேடிச் சென்று குடியேறியமையும் இந்துமதம் செல்வாக்குப் பெற்றுத் திகழக் காரணிகளாக அமைந்தன - என் றார்.

நூலின் ஆய்வுரையினை சைவப் புலவர் நித்தியதசிதரனும் தொடக் கவுரையினை சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும் நிகழ்த்தினர். (ப-12)


## மடிப்பு விநியோக ஊழியர்கள் தேவை

எமது நிறுவனத்தில் பத்திரிகை மடித்து அதிகாலை விநியோகம் செய்யக்கூடிய ஊழியர்கள் தேவை.

*தகைமைகள்:*

1. க.பொ.த. சாதாரண தரம்.
2. இரவுக்கடமை புரியக்கூடிய ஆரோக்கியம் உள்ளவராக இருக்கவேண்டும்.
3. மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை.

*குறிப்பு:* திறமைக்கேற்ப திருப்திகரமான ஊதியம் வழங்கப்படும்.

விரும்புவோர் 30-06-2004 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆவணங்களுடன் நேரில்வரவும்.

*தொடர்புகளுக்கு:*

மனிதவள சேவை
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-35906)(32-12-14)



## ஒப்படைத்துதவவும்

உயரப்புலம், ஆனைக்கோட்டைக்கும் யாழ்.நகரீற்கும் இடையில், வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட வறிய குடும்பத தினருடைய 2 1/2 பவுண் நிறையுடைய 3 காப்புகள் நேற்று (28.06.2004) திங்கட்கிழமை தவறிவிட்டன.

தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தயாளினி வீடியோ சென்ரா
பிடாரி கோவிலடி, கோக்குவில் மேற்கு.
கோக்குவில்.
T.P.: 021 4590172
(33604) (40)



## தவறிவிட்டது

நல்லூர் பிரதேச செயலகத்திற்கும் யாழ். நகரீற்கும் இடையில் NOKIA ரக கையடக்கத் தொலைபேசி ஒன்று நேற்று திங்கட்கிழமை தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

இல.20, கனகசபை அவனியூ,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 040290.
(33598) (12)



## நாகம்ஸ் சுன்னாகம்



இன்று முதல்
அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
ரஜனி, சௌந்தர்யா, ரம்மியாகிருஷ்ணன் நடித்த
படையப்பா
தினசரி: 11.00. 3.00. 7.00 (பு.நே.)
(C/35739) (12)



## ராஜா யாழ்ப்பாணம்

முதலாம் திகதி வரை
விஜய், த்திரிசா, பிரகாஸ்ராஜ் நடித்த



கில்லி
காட்சி நேரம்: 10.30. 2.30. 6.30. (பு.நே.)
(C/34517) (12)



## லக்சுமி இணுவில்

அஜித், சிநேகா, ரகுவரன், வையாபுரி, கருணாஸ் நடித்த



ஜனா
தினசரி: 11.00, 3.00, 7.00 புதிய நேரம்
விசேட காட்சியாக வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 9.30 இற்கும் (33466) (40)



## நிறைஞ்சனாஸ் சங்கானை



விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த
அருள்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
EXPOGURE [இரவு 8.45]
(C-35653)(12)


## 12 ஆவது வருட நினைவுகளுடன்...

மண்ணில் 14 - 09 - 1916



விண்ணில் 10 - 07 - 1992

### அமரா தம்பிப்பிள்ளை வீரசிங்கம்

திதி: 29.06.2004

அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்தீர் - என்றும்
தீராத வேதனையால் நித்தமும் நினைந்தழுகின்றோம்
பன்னிரெண்டென்ன எத்தனை நூறாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுடனே நித்தமும் நாம் வாழ்கின்றோம்.

கவிகா வாசம்,
கட்டப்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளில்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(33599)(12-14)

## இரண்டாவது வருட நினைவுகளுடன்...

தோற்றம் 07 - 03 - 1954



மறைவு 21 - 06 - 2002

### அமரர் மாணிக்கவாசகர் விஜயவர்மன்

இன்றும் இருக்கின்றீர் எம் நெஞ்சில்
நீர் இல்லாமல் ஈராண்டு கழிந்ததுவோ?
ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
என்றும் இருப்பீர்கள் எம் நெஞ்சில்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இணுவில்.

யுனிக் வீடியோ. (இணுவில்),
ஸ்கை போட்டோ (உரும்பிராய்),
மஜிக் வீடியோ (கல்வியங்காடு),
K.பரமேஸ்வரன் (T.O.) (இணுவில்).
(33600)(12-14)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பி செல்லம்மா

தனங்கிளப்பு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி செல்லம்மா அவர்கள் நேற்று (28.06.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலியில் உள்ள சி.நாகையா அவர்களது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நவாலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
சி.நாகையா (மகன்)
(அதிபர், யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை).
(33603)(40-12-14)

### யோசேவ் சிங்கராஜா



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேவ் சிங்கராஜா 26.06.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேவ் - அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும் அமிர்தராணி, மல்லிகாராணி (சுவிஸ்), யோகராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அல்பேட், சில்வெஸ்ரர், காலஞ்சென்ற மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரஞ்சோதி, பாலச்சந்திரன், தர்மஜோதி ஆகியோரின் மாமனாரும் கிஷோதினி, விஜிதரன், சயந்தன், நிசாந்தன் ரிசானி ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2004) செவ்வாய்க் கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இளவாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கல்லூரி வீதி,
இளவாலை.

தகவல்:
க.பரஞ்சோதி
(மருமகன்).
(33601)(38-12-14)

## நீங்காத நினைவுகளுடன் ...

3 ஆம் ஆண்டு

தோற்றம் 18 - 07 - 1924



மறைவு 30 - 04 - 2001

அமரர் கந்தையா சிவப்பிரகாசம்
(N.K.S) (பிரபல வர்த்தகர்)

13 ஆம் ஆண்டு

தோற்றம் 08 - 06 - 1955



மறைவு 23 - 06 - 1991

அமரர் சிவப்பிரகாசம் குபேரன்
(K.S.K) (பிரபல வர்த்தகர்)

வருடங்கள் பல உருண்டோடி விட்டாலும் நீங்கள் எம்மிடம் விட்டுவிட்டுச் சென்றுள்ள அன்பும் பண்பும் அரவணைப்பும் அஹிம்சையும் இன்றும் எம் மனதில் பசுமரத்தாணிபோல்!

சிலம்புப் புளியடி,
சங்கானை.
(33597)(40-12-14)

என்னும் நினைவுடன் வாழும்:
குபேரன் குடும்பத்தினர்.

# கருணாவை ராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுடன பேச்சு நடத்தியது.

நேற்று முற்பகல் சுமார் ஒன்றரை மணிநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது. சந்திப்புக் குறித்து பின்னர் செய்தியாளர்களுக்கு தமிழ்ச்செல்வன் தகவல் வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:-

*கேள்வி:-* கண்காணிப்புக்குழுத் தலைவருடன் என்ன விடயங்கள் குறித்துப் பேசினீர்கள்?

*பதில்:-* இன்றுள்ள சூழ்நிலை தொடர்பாக விவரமாகக் கலந்துரையாடினோம் முக்கியமாக, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை, கருணாவைத் தமது பாதுகாப்பில் படையினர் வைத்துக் கொண்டு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் குழப்பங்கள் ஆகியவை தொடர்பாக எடுத்துக் கூறினோம்.

கருணாவோடு நீண்ட நாள்களாக உடன் இருந்து, தற்சமயம் எம்முடன் இணைந்துள்ள பெண்போராளிகளின் வாக்குமூலங்களை வைத்துக்கொண்டு, இது தொடர்பாக அவர்களுக்கு விளக்கிக் கூறினோம்.

இந்தப் பெண் போராளிகள் நேரடியாக இராணுவத்தின் புலனாய்வு அமைப்பின் பாதுகாப்பில் இவ்வளவு காலமும் இருந்துள்ளனர். கிழக்கில் நடந்த படுகொலைகளுடன் கருணா சம்பந்தப்பட்டிருந்தார் என்பதையும் அவர்கள் உறுதி செய்துள்ளனர்.

இப்படியான நிலைமை தொடர்வது, யுத்தநிறுத்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்திக் கொண்டு போவதற்கு பல நெருக்கடிகளை உருவாக்கும் என்பதை கண்காணிப்பு குழுத் தலைவருக்கு விளக்கிக் கூறினோம்.

*கேள்வி:-* அரசுப் படையினரும் விடுதலைப் புலிகளும் மாதாந்தம் சந்திப்பது குறித்துப் பேசினீர்களா?

*பதில்:-* கருணாவை இராணுவம் தனது பாதுகாப்பில் வைத்துக்கொண்டு, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பதற்றத்தையும் குழப்பத்தையும், ஏற்படுத்துவதுடன் படுகொலைகளைச் செய்யும் நடவடிக்கைகளும் தொடரும் சூழலில் அங்குள்ள எமது தளபதிகள் இராணுவத்துடனான சந்திப்பைத் தவிர்த்தனர். இந்த நடவடிக்கைகளுக்கு முடிவு காணும் வரை - தீர்வு காணும் வரை - இப்படியான சந்திப்புக்களை எமது தளபதிகள் தவிர்த்துக்கொள்வார்கள்.

*கேள்வி:-* வடக்கைப் பொறுத்தவரை அரசுப் படைகள் - விடுதலைப் புலிகள் சந்திப்பு தொடருமா?

*பதில்:* ஏற்கனவே மாவட்டங்கள் தோறும் எமது அரசியல் பொறுப்பாளர்களுடன் படைத்தளபதிகள் தேவை ஏற்படும் போது கலந்துரையாடி வருகின்றனர். இந்த நடைமுறை தொடர்ச்சியாக நடக்கும்.

*கேள்வி:-* யுத்தநிறுத்த உடன்பாட்டின் நிலை இப்போது எப்படி இருக்கின்றது?

*பதில்:-* யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பொறுத்தவரையில் அண்மைக்காலத்தில் புதிய அரசு பதவியேற்ற பின்பு, போர்நிறுத்த நடைமுறைகள் சம்பந்தமாக பல குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடல் போக்குவரத்து, தரைப்போக்குவரத்து போன்ற இயல்பாக நடந்த நடவடிக்கைகள் மீது சில அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைக் கண்காணிப்புக குழுவுக்குத் தெளிவாகக் கூறியுள்ளோம். இதற்கான தீர்வை விரைவில காணவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:-* கருணா விவகாரம், போர்நிறுத்த உடன்பாடு சிக்கலான விடயங்களாக உள்ளன. இந்நிலையில் போர்நிறுத்தத்தின் தன்மை எப்படியிருக்கின்றது?

*பதில்:-* நிச்சயமாக இந்த விடயத்தில் எந்தச் சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

சமாதான நடவடிக்கைகளுக்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டை மேற்கொள்வது சம்பந்தமான நடைமுறைகளுக்கும் கருணாவின் நடவடிக்கை பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

கருணாவைப் பாதுகாத்துக் கொண்டு கருணாவின் பெயரில் படைத்தரப்பாலேயே இந்தக் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுவதை நாங்கள் உறுதி செய்துள்ளோம்.

அண்மைக்காலத்தில் இதை நாம் வெளிப்படுத்தி வந்தாலும் இப்போது அதை ஆணித்தரமாக உறுதிசெய்துள்ளோம். கருணாவுடன் நீண்டகாலமாக இருந்து விட்டு தப்பிவந்த போராளிகள் இதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில், அது சமாதான முன்னெடுப்புக்களுக்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கும் பெரும் அச்சுறுத்தலையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை அவர்களுக்குத் தெளிவாக்கியுள்ளோம்.

*கேள்வி:-* இந்த நெருக்கடியான சூழ்நிலையில், அடுத்தகட்டபோர் நிறுத்த நடவடிக்கைகள் எப்படியிருக்கப் போகின்றன?

*பதில்:-* அது எங்கள் கைகளில் இல்லை. படைத்தரப்பின் கைகளிலும அனுசரணையாளர்களாக இருக்கும் நோர்வே தரப்பினதும் கண்காணிப்புக் குழுவின் தரப்பினதும் கைகளில்தான் இருக்கின்றன என்று அவர்களிடம் தெரிவித்துள்ளோம். எதிர்காலம் அவர்களின் கைகளில்தான் இருக்கின்றது. அவர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்துத்தான் இதற்கு முடிவைச் சொல்லக்கூடியதாக இருக்கும்.

*கேள்வி:-* போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவா ஊடாக அரசுக்கு இன்று அனுப்பியுள்ள செய்தி என்ன?

*பதில்:-* அரசுக்குத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். கருணா என்பவர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் பல படுகொலைகளையும் செய்து பெரும் குழப்பங்களையும் ஏற்படுத்தி பதற்ற நிலை ஒன்றை உருவாக்கி சமாதான முன்னெடுப்புக்களுக்கும் யுத்தநிறுத்த சூழ்நிலைக்கும் நெருக்கடியை ஏற்படுத்திய குற்றமிழைத்த ஒருவர் அவரைப்பாதுகாத்து வருகின்றது.

பல படுகொலைகளுக்கு காரணமாக இருந்தவர் அண்மையில் பத்திரிகையாளர் நடேசன் கொல்லப்பட்டதற்கும் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் கொல்லப்பட்டதற்கும் கருணா சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது கூட ஓரளவு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது போல பல படுகொலைகள் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாளாந்தம் பதற்றநிலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமானவர் கருணாவே. ஆகவே அவரை இராணுவம் பாதுகாத்துக்கொண்டு அரசு அவரைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வரை அவர்கள் இந்தச் சமாதான முன்னெடுப்புக்களில் நம்பகத் தன்மையோடு நடப்பவர்கள் மாதிரி இல்லை என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். இதனைபாரிய நெருக்கடியான நிலையாகத்தான் நாங்கள் கருதுகின்றோம்.

*கேள்வி:* இன்றைய சந்திப்பில் காவல்துறைப்பொறுப்பாளர் கலந்துகொண்டமை குறித்து...?

*பதில்:* தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளரும் எங்கள் பேச்சுக்கள் அணியில் ஓர் உறுப்பினரென்ற வகையில் சந்திப்பில் எம்மோடு இணைந்து கலந்துகொள்வார் என்றார் தமிழ்ச்செல்வன்.

பேச்சில் கலந்துகொண்ட காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசனிடம் திருமலையில் காவல்துறை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டமை குறித்துக் கேட்டபோது அவர் தவறுதலாக எமது பிரதேசத்தில் இருந்து இராணுவப் பிரதேசத்துக்குள் வழிமாறிச்சென்றதனால் அவர் கைது செய்யப்பட்டார். இது தவறு என இராணுவமும் பொலீஸாரும் உணர்ந்ததால் உடன் விடுவிக்கப்பட்டு விட்டார் என்றார். (ஒ-3-5)

## சுண்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பவரே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்கானவராவார். யாழ்.மத்திய கல்லூரி முன்புறம் உட்பட பல்வேறு இடங்களிலும் சுண்டல்போன்ற உணவுப் பொருள்களை இவர் விற்று வந்தார்.

நேற்றிரவு யாழ்.பெருமாள் கோவிலடியில் இவர் விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் திடீரென அவரைக் கத்தியால் குத்தி விட்டு தப்பியோடிவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிரசிகிச்சைப பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.(ஒ-9)

## பிரதிவாதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்திருக்கிறது.

இந்த வழக்கை ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, சிஹல உறுமயவின் பொதுச் செயலாளர் திலக் கருணாநாயக்க உட்பட மற்றும் சில அமைப்புக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து தாக்கல் செய்திருந்தனர். (ஒ-9-4)

# படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்களுடனான சந்திப்புக் குறித்துக் கேட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் கிழக்கில் நிலவிவந்த அசாதாரண சூழ்நிலை குறித்துப் பேசினோம். குறிப்பாகக் கருணாவுக்கு உதவுவதைப் படையினர் நிறுத்தும் வரை தாங்கள் அவர்களுடனான பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று புலிகள் அறிவித்துள்ளமை குறித்துப் பேச்சு நடத்தினோம்.

ஆனால், புலிகளின் இந்தக் குற்றச்சாட்டை எங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆகவே, விடுதலைப் புலிகள் தங்களுடைய மனதைப் மாற்றிக்கொள்வார்கள் என்று நம்பினோம். ஆனால், அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான சந்திப்புக்கள் ரத்துச்செய்யப்பட்டதையிட்டு நாங்கள் வருத்தமடைகின்றோம். ஏனென்றால், இரண்டு தரப்புக்களினதும் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசுவது, இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது - என்றார் அவர்.

அரச அமைச்சர் ஒருவர் கருணாவுடன் தான் தொடர்பில் இருப்பதாகக் கூறினார். அரச அமைச்சர் ஒருவருக்கே கருணாவின் இருப்பிடம் தெரியும் என்றால், அரசுக்கும் தெரியும் என்றுதானே அர்த்தம் என்று ஹெறாக்லன்டிடம் கேட்கப்பட்டது. அதற்குள் அவர் அது குறித்து நான் எதனையும் அனுமானிக்க விரும்பவில்லை. இது தொடர்பாக நீங்கள் அரசிடம்தான் கேட்கவேண்டும். இதற்கு நான் பதிலளிக்க விரும்பவில்லை. அது எனது வேலையும் இல்லை-என்று பதிலளித்தார். (ஒ-9-4)

## இராணுவக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இருந்து பலத்த பாதுகாப்புடன் விமானம் மூலம் ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன் எடுக்கப்பட்ட இந்த ஆறு ஆட்கொணர்வு வழக்குகளில் ராஜபக்ஷ ஆஜர் செயயப்பட்டார்.

இந்த வழ்க்குகளில் எதிர் மனுதாரர்களாகக் குறிக்கப்பட்டுள்ளவர்களில் அரியாலை படைத்தள அதிகாரி, பலாலி படை அதிகாரி, இராணுவத் தளபதி ஆகியோருக்காக மட்டும் ஆஜராக சட்டமா அதிபர் தமக்கு அனுமதி வழங்கியுள்ளார் என்றும்-

ராஜபக்ஷ சார்பில் ஆஜராக சட்டமா அதிபரின் அனுமதியைத் தாம் பெறவேண்டும் என்றும் -

அதற்காக ஒரு மாதகால அவகாசம் தரவேண்டும் என்றும்-

அரச சட்டவாதியான செல்வி சுகந்தி கந்தசாமி நீதிமன்றில் தெரிவித்தார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி வழக்கை அடுத்தமாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அதுவரை ராஜபக்ஷவை யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கும் படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். சிவசுந்தரம் "ராஜபக்ஷ மரணதண்டனை விதிக்கப்பட்டவர். இவரை யாழ். சிறையில் வைக்க வசதி இல்லை. அத்துடன் பாதுகாப்பும் இல்லை. மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் வெலிக்கடை அல்லது போகம்பரை சிறைகளில்தான் தடுத்து வைக்கப்படுவது வழக்கம்"- என்று தெரிவித்தார்.

இதையடுத்து ராஜபக்ஷவை வெலிக்கடைச் சிறைக்கு அனுப்பும் படி நீதிபதி உத்தரவிட்டார்.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.விஜயநாயக்க தெரிவித்தார்.

அரசு - புலிகள் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வவுனியாவில் இடம்பெற்ற 15 ஆவது கொலைச் சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
"அப்பாவிகள் வழக்கைத் தாக்கல் செய்துவிட்டு தொடர்ந்து நீதிமன்றத்துக்கு அலைக்கழிவதை அனுமதிக்க முடியாது.

" சம்பந்தப்பட்ட எதிர் மனுதாரர்கள் தமது பதிலைச் சமர்பிக்கக் கடைசிச் சந்தர்ப்பம் வழங்குகின்றேன். அப்போதும் சமர்ப்பிக்காவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவேன் - என்று நீதிபதி தெரிவித்தார்.

இந்த வழக்குகளில் எதிர்மனுதாரர்கள் பதில் சமர்ப்பிக்க அடுத்த மாதம் 28 ஆம் திகதி கடைசிச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது என்று தெரிவித்து அந்தத் திகதிவரை வழக்குகளை நீதிபதி ஒத்திவைத்தார்.

அரச சார்பில் அரச சட்டவாதியான செல்வி சுகந்தி கந்தசாமி ஆஜராகியிருந்தார். எதிர் மனுதாரர்கள் சார்பில் பதில் மனு அணைக்க சட்டமா அதிபர் திணைக்களம் கால அவகாசம் கோரியுள்ளது என்று அவர் நீதிபதியிடம் தெரிவித்தார்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி ரெமிடியஸ் ஆஜராகி இருந்தார்.


இரவு மேற்பார்வையாளர்கள்

பத்திரிகை நிறுவனத்தில் இரவில் இயங்கும் பிரிவுகளின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கும், ஒன்றிணைத்து விரைவுபடுத்துவதற்கும் முன் அனுபவமும கல்வித்தகுதியும் உடையோரிடமருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள், நிறைந்த உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், பணியாளர்களை நிர்வகிக்கும் திறமை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

அச்சு இயந்திரங்கள் தொடர்பான ஓரளவு அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

யாழ்.மாநகரசபைப் பகுதிக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முழுமையான சுயவிவரங்களுடனும் உறவினர் அல்லாத இருவரிடம் இருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ்களுடனும் 07.07.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தேவை

ரைப் செற்றிங் தெரிந்த பெண் தேவை. வார நாள்களில் 4.30p.m.-6.30p.m. இடையில் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.
T.A.T கணனி சேவை,
பஸ்நிலையம் முன்பாக,
(33596) சுன்னாகம்.

R.J TUTION CENTER
ஈச்சமோட்டை
A/L 2006
LOGIC
புதன் 4.p.m.
P. கமல்
அனுமதிகள் வழங்கப்படும்.
(33602)(32)

மெகா
குறிப்பிட்ட அனுமதிகளே உள்ளதால் கணனி உயர்கல்விக்கான புலமைப்பரிசில் பெற்றவர்கள் உடன் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
ASIAN COMPUTERS
யாழ்ப்பாணம்-சுன்னாகம்-நெல்லியடி






அறிமுகம்
FIERO FX
முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
சுசுக்கி ரேடர்ஸ்
59,57 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
0777-340056 ☎: 021-222-6185
TVS Lanka Private Ltd.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.